

# இலக்கு

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

இதழ் : 31 ★ 23.06.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com



## இன்று தமிழ் அரசியல் கைதி மரணம்

அரசின் மீதும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மீதும் தமிழ் மக்கள் கடும் விசனம்

## கல்முனை விவகாரம் மோசமடைய காரணம் யார்?

பூமிகன்






## மக்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகளை ஆவணப்படுத்துவதே எமது பிரதான நோக்கம்

உண்மைக்கும் நீதிக்குமான அனைத்துலக அமைப்பின் தலைவர் யஸ்மின் சூக்கா அம்மையார் இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு நேர்காணல்

## மகேந்திரனுக்கு பொதுமன்னிப்பளிக்குமாறு இறைவனிடம் வேண்டுவதைத் தவிர வேறுவழியே இல்லை

மகேந்திரனின் சகோதரி இலக்கு மின்னிதழுக்கு நேர்காணல்





## சிறப்பு முகாம்களா? சித்திரவதைக் கூடங்களா? - வைகோ கண்டனம்

# ஆவா குழுவிற்கு அங்கீகாரம் வழங்கி தமிழர் தாயகத்தில் பதற்றத்தை நீடிக்க முயல்கிறாரா வடக்கின் ஆளுநர்

## தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி

மக்களை அச்சுறுத்தும் வகையிலான சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வரும் சட்ட விரோத ஆவா குழுவுக்கு அங்கீகாரம் அளித்து வடக்கினை தொடர்ந்து பதற்றத்திற்குள் வைத்திருக்க வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் முயல்கின்றாரா? என தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி எழுப்பியுள்ளது.

இது சம்பந்தமாக இன்று மையம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2009 யுத்த முடிவுக்கு வந்த பின்னரான காலப்பகுதியில் தமிழர் தாயகத்தை தொடர்ந்து இராணுவப் பொறிக்குள் வைத்திருப்பதற்கு சுமுக நிலைமைகளை குழப்புவதற்கு படையினரும், மஹிந்த தரப்பும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்தார்கள். டக்ளஸ், சித்தார்த்தன், கருணா போன்றவர்களிடத்தில் தானே ஆயுதங்களை மீளப்பெற்றேன் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தா கூறினாலும் இக்காலப்பகுதியில் "ஆவா" எனப்படும் சட்டவிரோத குழுவொன்று தலைதூக்க ஆரம்பித்தது.

திருட்டு, நபர்கள் மீதான தாக்குதல்கள், வாள்வெட்டுச் சம்பவங்கள் என அவ்வப்போது நிகழ்த்தி வந்தமையால் பொதுமக்கள் மத்தியில் அச்சமான மனநிலையொன்று தோற்றம்பெற்றது.

ஆறு பொதுமக்களுக்கு ஒரு படைவீரர் என்ற அடிப்படையில் இராணுவம் வடக்கில் நிலைகொண்டுள்ளது. இதனை விட காவல் துறையினர், புலனாய்வுப்பிரிவுகள் என இலட்சக்கணக்கானோர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மத்தியில் வெறுமனே கூரிய ஆயுதங்களை தாங்கிய இளம் வயதினரைக் கொண்ட சிறு குழுவொன்றால் தனது இலக்கை நோக்கி செயற்பாடுகளை



முன்னெடுக்கவும் சுதந்திரமாக பயணிக்கவும் எவ்வாறு முடிகின்றது என்ற கேள்வி இங்கு எழுகின்றது. எந்தவொரு படைத்தரப்பாலும் அவர்களை அணுக முடியவில்லை. அவ்வாறு இந்த சட்டவிரோத குழுவினால் சுதந்திரமாக நடமாடுவதற்கும், செயற்படுவதற்கும் முடிகின்றது என்றால் அதன் பின்னணியில் யார் இருக்கின்றார்கள்.

4 ஆம் பக்கம் பார்க்க

# அரசிற்கு மாமா வேலை பார்ப்பதை கூட்டமைப்பு நிறுத்த வேண்டும்

## தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி விக்கினேஸ்வரன் காட்டம்.



கல்முனை வடக்கு தமிழர் பிரிவை தரமுயர்த்துவதில் அரசாங்கம் காலம் கடத்தினால் பேராபத்து ஏற்படும் என எச்சரித்துள்ள வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் கூட்டமைப்பு மாமா வேலை செய்வதையும் தவிர்க்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

ஏப்ரல் 21 ஆம் திகதி குண்டுவெடிப்பு பற்றி அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்த அரசாங்கம், கல்முனை விவகாரத்திலும் அவ்வாறான போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது என்று வலியுறுத்தியுள்ள வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள்



கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்கினேஸ்வரன், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரச்சனைக்குத் தீர்வு காணாமல் அரசாங்கத்திற்கு மாமா வேலை செய்து கால அவகாசத்தை எடுத்துக் கொடுக்கப் பார்க்கின்றது. அவர்கள் இந்த மாமா வேலை செய்யும் பழக்கத்தை நிறுத்த வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

கனடா "வாணிபம்" வியாபார தகவல் கையேட்டு நிறுவனத்தினரின் நிதி அனுசரணையில் மக்கள் நலன் காப்பகத்தின் "அன்பகம்" மூதாளர் மாதாந்த உதவித்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சி, மக்கள் நலன் காப்பகம் நடுவகப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விக்கினேஸ்வரன் உரையாற்றினார். அவர் தனது உரையில் முக்கியமாகக் குறிப்பிட்டதாவது

கல்முனை உபபிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்துவது சம்பந்தமாக நாங்கள் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி மட்டக்களப்பில் இருந்து கல்முனைக்கு நடைபவனி ஆரம்பித்திருந்தோம். சுமார் ஒரு கிலோமீற்றர் நாம் நடந்துபோனபோது காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டோம். அங்கிருக்கும் கிறிஸ்தவ ஆலயத்தில் குண்டுவெடிப்பு அன்று காலை நடந்தது பற்றி அப்போதுதான் அறிந்து கொண்டோம். நடைபவனியை நாம் அன்று கைவிட்டாலும் பாதிக்கப்பட்ட மக்களுடன் இன்று வரையில் தொடர்பில் இருந்து வருகின்றோம். உண்ணாவிரதிகளைக் கண்டு எமது ஆத்மார்த்த ஆதரவினை வெளிப்படுத்தி வருகின்றோம்.



21 ஆம் திகதி குண்டுவெடிப்பு பற்றி அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்த அரசாங்கம் இதிலும் இவ்வாறான போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது என்று வலியுறுத்துகின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரச்சனைக்குத் தீர்வு காணாமல் அரசாங்கத்திற்கு மாமாவேலை செய்து கால அவகாசத்தை எடுத்துக் கொடுக்கப் பார்க்கின்றது. அவர்கள் இந்த மாமாவேலை செய்யும் பழக்கத்தை நிறுத்த வேண்டும்."

# கல்முனைப் போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது.

**கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்த்தல் கோரிக்கையை முன்வைத்து மேற்கொண்டு வந்த உண்ணாவிரதப்போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது. மதத்தலைவர்களும் அரசியல் தலைவர்களும் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய தற்காலிகமாக போராட்டத்தை கைவிடுவதாகவும், தங்களது கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் மீண்டும் சாகும்வரையான உண்ணாவிரத போராட்டத்தில் இறங்குவோமென்றும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமான இப்போராட்டத்திற்கு பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதத் தலைவர்கள், தமிழ், சிங்கள அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் மற்றும் பல மாவட்டங்களின் பொது மக்கள் ஆதரவை வழங்கியிருந்தனர்.**

## விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளை டெல்லிக்கு அழைக்க தயாராகும் இந்தியா




சனநாயக போராளிகள் கட்சியிலிருந்து அறுவரை டெல்லிக்கு அழைப்பதென்றும் இதன்போது போது சனநாயக போராளிகளின் நிலைப்பாடுகள் மற்றும் எதிர்கால திட்டங்கள், செயற்பாடுகள் குறித்து விரிவான முறையில் இந்தியத் தரப்பின் பல முக்கியஸ்தர்களுடன் கலந்தாலோசனைகளை நடத்துவது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு போர் நிறைவுக்கு வந்ததன் பின்னர் விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளுடன் இந்தியாவின் மத்திய மாநில அரசுகள் எவ்விதமான உத்தியோக பூர்வமான பேச்சுகளையும் இதுவரையில் எடுத்திருக்கவில்லை. இந்நிலையில் போர் நிறைவடைந்து பத்தாண்டுகளைக் கடந்துள்ள நிலையில் முதல் தடவையாக விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களை முதன்மைப்படுத்தி உருவாகியுள்ள சனநாயக போராளிகளுடன் கலந்துரையாடல்களை செய்வதற்கு டெல்லிக்கு அழைக்கின்றமை முக்கிய விடயமாகும்

## போட்டியில் இருந்து விலகுகிறாரா சிறிசேன?



சிறீலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன, அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகிக் கொள்ளக் கூடும் என்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பெண்கள் முன்னணி கூட்டத்தில் உரையாற்றிய சிறீலங்கா அதிபர், கட்சிக்கும், கட்சியின் ஆதரவாளர்களுக்கும் அநீதி ஏற்படாத வகையில் அதிபர் தேர்தல் விடயத்தில் கௌரவமான முடிவு எடுக்கப்படும் என்று கூறியிருந்தார்.

அத்துடன், மும்முனைப் போட்டிக்கு வாய்ப்பில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே, அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து மைத்திரிபால சிறிசேன விலகிக் கொள்ளக் கூடும் என்றும், எதிர்க்கட்சி வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கக்கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில், ஐதேக முன்னிறுத்தப் போகும் வேட்பாளருக்கும், மகிந்த ராஜபக்சவினால் பெரும்பாலும் களத்தில் இறக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படும் கோத்தபாய ராஜபக்சவுக்கும் நேரடிப் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஞானசார தேரரின் விடுதலையை எதிர்த்து வழக்கு



பொதுபலசேனாவின் பொது செயலாளர் ஞானசார தேரரை சனாதிபதி பொதுமன்னிப்பில் விடுவித்தமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. காணாமல் போன ஊடகவிலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட மற்றும் மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்க மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை ரத்துசெய்யுமாறு இந்த மனுக்களில் கோரப்பட்டுள்ளது. அத்துடன் மனுக்களின் விசாரணையை யூலை மாதம் அடுத்தடுத்த தினங்களில் நடத்துமாறும் கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்த் தலைமையின் தலைமைத்துவ பலவீனம்

புதிய அரசியலமைப்பு வடக்கு, கிழக்கு இணைப்பு பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றது கூட்டமைப்பின் தலைமை சம்பந்தன். கருமங்கள் நகர்ந்து கொண்டிருப்பதாகவும் சகோதர இனங்களான முஸ்லிம்களுடன் அணுகுமுறை ரீதியிலான பேச்சுக்கள் கால இடைவெளியில் இடம்பெற்றுவருவதாகவும் அவ்வப்போது அறிவித்தல்களையும் செய்கிறது இந்த தலைமை.

ஆனால் கல்முனை வடக்கில் தமிழர்களின் நிருவாக அலகாக ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கின்ற கல்முனை வடக்கு உப அலகை, பிரதேச செயலகமாக மாற்றிக் கொள்வதற்குக்கூட அனுமதிக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றது முஸ்லிம் தரப்பு. தற்போது உண்ணாவிரதப்போராட்டம் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றபோதும் அதற்கான தீர்வை வழங்க திராணியற்ற நிலையில் கூட்டமைப்பின் தலைமை உள்ளது.

ஆட்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினை அமரவைத்திருப்பது நாங்களே என்று மார்பு தட்டிக்கொண்டிருக்கும் கூட்டமைப்பு, அரசியலபிலாஷைகள், பொறுப்புக்கூறல், காணாமலாக்கப்பட்டவர்கள், அரசியல்கைதிகள் விடுதலை என தமிழர்களின் எந்தவொரு விடயத்தினையும் சாதிக்க முடியாது சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களிடத்தில் சாரணாகதி அடைந்து இருக்கின்றமை தமிழர்களின் உரிமைப்போராட்டத்தில் பெரும் பலவீனமே.

பேரினவாதத்திடம் பேரம்பேசமுடியாது என்றால் ஆகக்குறைந்தது கிழக்கு மாகாண சபையில் பெரும்பான்மை தமிழ் உறுப்பினர்கள் இருந்தபோதும், முஸ்லிம் முதலமைச்சர் ஒருவர் ஆட்சி செய்வதற்காக நல்லெண்ண சமிக்ஞையாக காட்டிய கூட்டமைப்பால் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் கூட தனது விட்டுக்கொடுப்பை முன்னிலைப்படுத்தி பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு இயலாமல் இருக்கும் தலைமையொன்று தமிழர்களுக்கு இருப்பது மிகப்பெரும் சாபக்கேடு.

தமிழர்களின் இருப்பினை பாதுகாக்கின்ற ஒரு உப அலகையே தரமுயர்த்த முடியாத வல்லமையற்ற நிலைமை தற்போது எழுந்துள்ளது. இப்படி இருக்கையில் தமிழர்கள் தாயகம் அதன் இருப்பு ஆகியவற்றை இந்த தலைமை பாதுகாக்குமா என்ற கேள்வியும் எழுகின்றது. அதேநேரம் தமிழர்களின் உயிர் மூச்சான தாயக கோட்பாடான வடகிழக்கு இணைப்பு சாத்தியமாகுமா என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது.

கல்முனை உப அலகு தரமுயர்த்தப்படுவது தொடர்பான விடயத்தினை கருத்தில் கொள்கின்றபோது முஸ்லிம்கள் அரசியல் அதிகாரங்களை எப்படி பயன்படுத்தியுள்ளார்கள் என்பதை கூர்ந்து அவதானிக்க வேண்டியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, காத்தான்குடி, ஏறாவூர் பிரதேசங்களிலுள்ள முஸ்லிம் பாடசாலைகள் இணைக்கப்பட்ட மட்டக்களப்பு மத்திய வலயம், அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் கல்வி வலயத்திலிருந்து பிரித்து, பொத்துவில் கல்வி வலயம், கல்முனையிலிருந்து பிரித்து சாய்ந்தமருது தனிப் பிரதேச சபையை உருவாக்கும் முயற்சி, அதேபோன்று கோரளைப்பற்று மத்தி, கோரளைப்பற்று மேற்கு பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டமையைக் உதாரணங்களாக கூறமுடியும்.

இந்திய இராணுவம் இலங்கையில் குடிகொண்டிருந்த காலம், அதன் பின்னரான காலப்பகுதி, தற்போதைய நிலை என்று பார்க்கும் போது, பல்வேறு பாதுகாப்பு சார் பிரச்சினைகளைத் தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்கொண்டனர். இருந்தாலும் அவற்றிலிருந்து, இலகுவில் தப்பித்துக் கொண்டவர்கள் முஸ்லிம்கள்தான்.

கல்முனை நகரம், முஸ்லிம்களின் இதயம் என்று சொல்லிக் கொள்கின்ற அளவுக்கு, கல்முனை நகரம் இப்போது பெரும்பாலான முஸ்லிம்களால் நிரம்பி வழிவதற்கு முன்னரான காலப்பகுதி, யாராலும் ஞாபகப்படுத்தப்படுவதில்லை. கல்முனைக்குடி, சாய்தமருது, சம்மாந்துறை, நிந்தவூர், மாளிகைக்காடு, அக்கரைப்பற்று, அட்டாளச்சேனை, ஒலுவில் என ஏனைய கிராமங்களிலிருந்து வந்து, கல்முனையில் வாடகைக் கடைகளைப் பெற்று, வியாபாரத்தை மேற்கொண்டவர்கள், சொந்தமாகக் கொள்வனவு செய்து கொண்டவர்கள் என அந்த நிரம்பல் நடைபெற்றிருக்கிறது.

ஆகவே வரலாற்று ரீதியாக பார்க்கையில் தமிழ் தலைமையின் பலவீனமே கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறையில் தமிழின குடிப்பரம்பல் மாற்றத்திற்கு பொறுப்புக்கூறவேண்டியதாக உள்ளது. விசேடமாக கிழக்கை தனது கோட்டையாக கருதும் கூட்டமைப்பின் தற்போதைய தலைமையின் தலைமைத்துவ தோல்வியே தமிழர்களின் நிலைமை இந்தளவு தூரம் மோசமடையக் காரணம் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

# இன்று தமிழ் அரசியல் கைதி ஒருவர் மரணம்

## அரசின் மீதும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மீதும் தமிழ் மக்கள் கடும் விசனம்


தமிழ் அரசியல் கைதி ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இன்று உயிரிழந்தார். கதிர்காமர் கொலை வழக்கில் மகசீன் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த முத்தையா சகாதேவன் (வயது-61) என்பவரே உயிரிழந்தவராவார்.

இலங்கை அரசின் தமிழர் விரோதப்போக்கும், கைதிகளின் விடயத்தில் இலங்கை அரசிற்கு உரிய அழுத்தம் கொடுக்காமல் அரசை பாதுகாத்துவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொறுப்பற்ற தன்மையுமே தொடர்ந்து சிறைக்குள்ளேயே அரசியல் கைதிகள் சாவினை தழுவுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. இலங்கையின் சிறைச்சாலைகளில் நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் சொல்ல முடியாத துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் விடுதலைக்காக சிவில் சமூகம் கடந்த காலங்களில் போராட்டங்களை முன்னெடுத்திருந்த நிலையில் அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட தற்கொலைத் தாக்குதல்களால் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எவரும் அக்கறை காட்டாத சூழ்நிலையில் அரசியல் கைதிகள் கடுமையான மன அழுத்தங்களுடன் இருந்துள்ளனர். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட தமிழர்களின் உடனடி உரிமை சார்ந்த விடயங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்காமல் அடுத்த தேர்தலில் எவ்வாறு வெற்றிபெறலாம் என்ற சுயநல சிந்தனையுடன் செயற்பட்டதன் விளைவே இன்று ஒவ்வொரு அரசியல் கைதிகளின் வாழ்வும் சிறைகளிலேயே முடிந்துபோவதற்கு காரணமாகிறது என்று தமிழ் மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அண்மையில் இலங்கையில் ஆட்சி அதிகாரத்தில் நெருக்கடி ஏற்பட்டபோது கூட்டமைப்பானது அரசியல் கைதிகளின் விடுதலையை ஒரு முன்நிபந்தனையாக வைக்காது இலங்கை அரசின் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பணியாற்றி வருவதாக அரசியல் அவதானிகள் தமது கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

# திருகோணமலை துறைமுக அபிவிருத்திக்கு யப்பான் நிதியுதவி

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு, யப்பான் 1 பில்லியன் யென், நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளது யப்பானிய தூதுவர் ஷின்சோ அபேசியின் சிறப்பு பிரதிநிதியாக, சிறீலங்கா வந்துள்ள, யப்பானிய பிரதமரின் சிறப்பு ஆலோசகர், கலாநிதி ஹிரோரோ இசுமி, நேற்று சிறீலங்கா பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் அலரி மாளிகையில் நடத்திய பேச்சுக்களின் போதே, இந்த நிதியுதவி பற்றி அறிவித்தார். சிறீலங்காவை நல்லதொரு நண்பனாக பார்க்கும் யப்பான், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால பொருளாதார, கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதில் உறுதி பூண்டிருப்பதாக, கலாநிதி ஹிரோரோ இசுமி, இந்தச் சந்திப்பின் போது கூறினார். திருகோணமலை துறைமுகத்தை முன்னேற்றுவதற்கு 1 பில்லியன்




யென், கொடையை யப்பான் வழங்கும் என்றும், யப்பானின் கியோட்டோ நகரைப் போன்று கண்டி நகரத்தை அபிவிருத்தி செய்ய யப்பான் உதவும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார். இந்தச் சந்திப்பின் போது, கொழும்பு இலகு தொடருந்து திட்டம், மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டம், கட்டுநாயக்கா அனைத்துலக விமான நிலைய அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

# 8000 வெளிநாட்டவர்களை நாடு கடத்த தயாராகும் சிறீலங்கா

நுழைவிசைவு காலாவதியான நிலையில், சிறீலங்காவில் தங்கியுள்ள 8000 வெளிநாட்டவர்கள் சிறீலங்காவில் இருந்து நாடு கடத்தப்படவுள்ளனர். இதற்குத் தேவையான நிதி மற்றும் ஒழுங்குகளைச் செய்வதற்கு, அமைச்சரவையின் ஒப்புதலை உள்நாட்டு விவகார அமைச்சு கோரவுள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதலுக்குப் பின்னர், நுழைவிசைவு காலாவதியான பின்னரும், சிறீலங்காவில் தங்கியுள்ள 7900 வெளிநாட்டவர்கள் பற்றிய தரவுகளை குடிவரவுத் திணைக்களத்தின் புலனாய்வு அலகு கண்டறிந்துள்ளதாக, குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பசன் ரத்நாயக்க தெரிவித்தார்.

"இவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலா நுழைவிசைவில் வந்தவர்கள். தற்போது விடுதிகள், கட்டுமாணத் துறைகளிலும், உணவகங்கள், விவசாயப் பண்ணைகளிலும் பணியாற்றுவதுடன், வணிக நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்.

நுழைவிசைவு காலாவதியான பின்னரும் தங்கியிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். குறிப்பாக 1,680 இந்தியர்கள், 936 பாகிஸ்தானியர்கள், 683 சீனர்கள், 291 மாலைதீவு நாட்டவர்கள், 152 பங்களாதேஷ் நாட்டவர்கள், 42 யப்பானியர்களும் இதில் உள்ளடங்கியுள்ளனர்.

மேலும், நெதர்லாந்தைச் சேர்ந்த 541 பேரும், உக்ரேனைச் சேர்ந்த 167 பேரும், சவூதி அரேபியாவைச் சேர்ந்த 172 பேரும், ரஷ்யாவைச் சேர்ந்த 157 பேரும், லெபனானை சேர்ந்த 157 பேரும், நைஜீரியாவை சேர்ந்த 130 பேரும், பிரான்சை சேர்ந்த 110 பேரும், பிரித்தானியர்கள் 44 பேரும், நுழைவிசைவு காலாவதியான பின்னரும் சிறீலங்காவில் தங்கியுள்ளனர்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2 ஆம் பக்க தொடர்ச்சி ➔

## ஆவாக் குழுவிற்கு

அதனை யார் இயக்குகிறார்கள் யார் ஊக்கப்படுத்துகின்றார்கள்.

வடக்கில் சட்டம் ஒழுங்கு, தேசிய பாதுகாப்பு என அனைத்தையும் கட்டுக்குள் வைத்திருப்பதாக மார்பு தட்டிக் கூறும் படையினர் 12ஆயிரம் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைத்துவிட்டு அவர்களை தமது கழுகுப்பார்வைக்குள் வைத்திருப்பதாக பெருமிதம் கொள்கின்ற படைத்தரப்பால் இந்த சட்டவிரோத சிறு குழுவை ஏன் கட்டுப்படுத்த முடியாது என்கின்ற கேள்வி அனைவர் மத்தியிலும் எழுகிறது.

இந்நிலையில், வடக்கின் ஆளுநர் பதவியை ஏற்றுக்கொண்ட சுரேன் ராகவன், முதலாவதாக பெருமெடுப்பில் வவுனியாவில் பௌத்த மாநாட்டினை நடத்தி வடக்கில் நடைபெறும் பௌத்த மயமாக்கலுக்கான தனது அங்கீகார சமிக்ஞையை காட்டி தென்னிலங்கையை திருப்திப்படுத்தினார்.

பின்னர், யூன் 14ஆம் திகதி, ஆவா குழுவுடன் நிராதியுதபாணியாக பேசுவதற்கு தயார் என்று அறிவித்தார். இந்த அறிவிப்புக்கு சரியாக ஆறு நாட்களின் பின்னர் யூன் 20ஆம் திகதி ஆவா குழு முதல்முறையாக உத்தியோக பூர்வமான தனது முத்திரை பதிக்கப்பட்ட கடித தலைப்பில் அந்த பேச்சு அழைப்புக்கான அறிவிப்பினை நிராகரித்து பதில் கடிதம் அனுப்பியுள்ளது.

தென்னிலங்கையில் இருக்கும் எத்தனையோ பாதாள உலக குழுக்களுக்கும், சமுக விரோதக்குழுக்களுக்கும் காவல்துறையினரோ, படையினரோ அல்லது அங்குள்ள அரசியல்வாதிகளோ இவ்வாறு பேச்சுக்கான அழைப்பினை இதுவரையில் விடுத்துள்ளனரா? அப்படியிருக்கையில் சட்ட விரோத குழுவொன்றுக்கு வடக்கின் ஆளுநர் எவ்வாறு பேச்சுவார்த்தைக்கான அழைப்பினை விடுத்தார்? எந்த சட்டம் இதற்கு அனுமதியளித்தது? போன்ற பல கேள்விகள் எழுகின்றன.

இவ்வாறு அழைப்பு விடுப்பதன் மூலம் சமூகத்தினை அச்சுறுத்தும் சட்டவிரோத குழுவொன்றுக்கு அங்கீகாரம் அளித்து அதனை கட்டமைக்கப்பட்ட ஒரு அணியாக மாற்றுவதற்கு ஆளுநர் விளைகின்றாரா என்ற பாரிய கேள்வி இல்லாமலில்லை.

அதேநேரம் இந்தக்குழுவின் இயக்கும் சக்தியாக படையினரே இருப்பதாக தகவல்கள் உள்ள நிலையில் அக்குழுவிற்கு அங்கீகாரம் அளித்து வடக்கினை முழுமையான பதற்றத்திற்குள் வைத்திருந்து தமிழர் தாயகத்தை முழுமையாக இராணுவ பூமியாக மாற்றும் அரசின் திட்டத்தினை ஆளுநர் அரங்கேற்ற முற்படுகின்றாரா? என்ற கேள்வியும் உள்ளது.

சர்வதேச பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.உடன் தொடர்புடையவர்களையே 24 மணித்தியாலத்திற்குள் கட்டுக்குள் கொண்டுவர முடிந்த சிறீலங்க படையினருக்கு 2013 முதல் இப்போது வரையில் செயற்படும் ஆவா சிம்ம சொப்பனமாக இருக்கின்றதா? என்ற கேள்விக்கு இலங்கை அதிகார வர்க்கமும் அவர்களை பாதுகாத்து நிற்கும் தமிழ்த் தலைமைகளும் தான் பதிலளிக்க வேண்டும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# போரிலும் அதன் பின்னரும் மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளை ஆவணப்படுத்துவதே எமது பிரதான நோக்கம்

## யஸ்மின் சூக்கா சிறப்பு நேர்காணல் - 2

**மனிதமும் தர்மமும் மரித்து விட்ட உலகின் ஒரு நம்பிக்கை ஒளியாக விளங்குபவர் யஸ்மின் சூக்கா அம்மையார் அவர்கள். உண்மைக்கும் நீதிக்குமான அனைத்துலக அமைப்பின் பொறுப்பை ஏற்று மனித உரிமை தளத்திலே ஒடுக்கப்படும் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் இன மத மொழிகளை கடந்து தொடர்ந்து குரல் கொடுத்துவருகிறார். ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அரசு மேற் கொண்ட இன அழிப்பு செயற்பாடுகளையும், இறுதி யுத்தத்திலே இலங்கை அரசு மேற் கொண்ட போர்க்குற்றங்களுக்காகவும் பாதிக்கப்பட்டவர்களின் குரலாக அவர் தீவிரமாக கடமையாற்றிவருகிறார். குறிப்பாக இலங்கை அரசபடைகள் தமிழ் பெண்கள் மீது மேற் கொண்ட வன்முறைகளின் சாட்சியங்களை தொகுத்து ஐ.நா.மன்றத்திடம் கையளித்து உலகில் உள்ள தமிழர்களின் கவனத்தை ஈர்த்தவர்.**

**கேள்வி: இலங்கையின் உள்நாட்டுப் போரின் போதும் அதன் பின்னரும் இலங்கை அரச படைகளினால் இழைக்கப்பட்ட கொடூரங்களை உங்களால் வழிநடத்தப்படும் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்றிட்டம் (ITJP) ஆவணப்படுத்தி வருகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் இந்த அமைப்பு எப்படிப்பட்ட பங்களிப்பை இதுவரை வழங்கியிருக்கிறது என்பதைக் கூறமுடியுமா?**

பதில்: 2011ம் ஆண்டு ITJP ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூவர் கொண்ட நிபுணர்கள் குழு தனது பணியை நிறைவுசெய்திருந்தது. அந்தக் குழுவில் நானும் அங்கம் வகித்தேன். டெனா, பிரான்சிஸ் கரிசன் போன்றோர் இந்த நிபுணர் குழுவுக்கு உதவியளித்துக்கொண்டிருந்தார்கள். அக்காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட பலதரப்பினரிடமிருந்தும் எங்களுக்கு தொலைபேசி அழைப்புகள் வந்து கொண்டிருந்தன. அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்களும் எங்களுக்குக் கிடைத்திருந்தன. அப்படிப்பட்ட ஒரு தருணத்தில் தான் இப்படிப்பட்ட ஒரு செயற்றிட்டத்தை நிறுவ நாங்கள் முடிவு செய்தோம்.




போர்க்காலத்திலும் அதன் பின்னரும் மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளை ஆவணப்படுத்துவது எமது முக்கிய நோக்கமாக இருந்தது. ஐக்கிய நாடுகள் தாபனம் இந்த ஆவணங்களைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கும் என்ற எதிர்பார்ப்பும் எங்களுக்கு அப்போது இருந்தது. ஆரம்ப கட்டத்தில் எங்களால் தயார்செய்யப்பட்ட அறிக்கைகள் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக ஐநா நிபுணர் குழுவின் பணியைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரினால் ஏற்படுத்தப்பட்ட விசாரணைகள் நடைபெற்று, இறுதியாக 2015ம் ஆண்டு இணை அறிக்கை வெளிவர



காரணமாக அமைந்தது. 2011 இலிருந்து 2015 வரை இக்காலப்பகுதி நீண்டிருந்த போதிலும், உண்மையைச் சொல்லப்போனால், இச்செயற்பாடுகளின்றி ஐ.நாவின் விசாரணை முயற்சிகள் சாத்தியமான நிலையை அடைந்திருக்க மாட்டாது என்றே நான் கருதுகின்றேன். ஓஐஎஸ்எல் என்ற ஐக்கிய நாடுகள் தாபனத்தின் விசேட அமைப்பு தனது பணிகளைச் செய்ய நாங்கள் உதவினோம். ஒரு புறத்தில் எம்மிடமிருந்த வாக்குமூலங்களை நாங்கள் அவர்களிடம் கையளித்ததுடன் பாதிக்கப்பட்ட தனிநபர்களுடனும் பாதிக்கப்பட்ட சமூகங்களுடனும் அந்த அமைப்பு நேரடியாகத் தொடர்புகளை மேற்கொள்ள நாங்கள் வழிவகை செய்தோம். ஐக்கிய நாடுகள் தாபனம் இலங்கை தொடர்பான தனது பணிகளைக் காத்திரமான முறையில் மேற்கொள்வதற்கு வேண்டிய உதவிகளை வழங்குவதே அப்போது எமது முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது.

இணை அறிக்கை வெளிவந்ததன் பின்னரான காலப்பகுதியில், அதாவது 2016, 2017ம் ஆண்டுகளில் - இலங்கையில் ஒரு புதிய அரசு பதவியேற்றிருந்ததுடன் சர்வதேச சமூகமும் காணாமல் போனோர் பணிமனை (ஓஎம்பி) போன்ற செயற்பாடுகளை இலங்கை அரசு முன்னெடுக்கக் கூடியவிதத்தில் இலங்கைக்கு உரிய வாய்ப்புகளை வழங்கவேண்டும் என்ற நிலைப்பாட்டையும் கொண்டிருந்தது. இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களை விசாரணை செய்ய ஒரு நீதிமன்றை நிறுவுவதும் அவ்வேளையில் சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதே நேரத்தில் 2016ம் ஆண்டளவில் நீதியை நிலைநாட்டுவதற்கான உண்மையான ஆர்வத்தை இலங்கை அரசு கொண்டிருக்கவில்லை என்ற ஒரு உண்மையை நாம் தெளிவாகவே புரிந்துகொண்டோம்.

அந்த நேரத்தில் இலங்கை அரசு மக்களின் கருத்தை அறிந்துகொள்ள ஒரு கருத்துக்கணிப்பை மேற்கொள்வதற்காக ஒரு குழுவை நியமித்தது. நீதிப்பொறிமுறைகள் மற்றும் நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகள், செய்யப்படவேண்டிய பரிகாரங்கள் என்பன தொடர்பாக எம்மிடம் வாக்குமூலத்தை அளித்திருந்த பாதிக்கப்பட்ட மக்கள் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள அந்த மக்கள் மத்தியில் நாங்களும் ஒரு கருத்துக்கணிப்பை மேற்கொண்டோம். எமது ஆய்வின் முடிவுகளை நாம் பகிரங்கப்படுத்தினோம். அதுமட்டுமன்றி இலங்கையில் அரசினால் இந்த நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட குழுவுக்கும் எமது அறிக்கையை நாம் அனுப்பி வைத்தோம். எம்மை முற்றிலும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய விடயம் என்னவென்றால் இலங்கை அரசோ, தாம் நியமித்த குழுவின் அறிக்கையைக்கூட பெற்றுக்கொள்ள முன்வரவில்லை என்பதாகும். இலங்கையில் நடந்த உள்நாட்டுப்போரின் போது மனித உரிமை மீறல்கள் நடைபெற்றன என்பதை உறுதிப்படுத்துவதோடு அதற்கான நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்பதையும் மக்கள் எதிர்பார்த்தார்கள். குற்றவியல் தொடர்பான நீதிப்பொறிமுறையையே பெரும்பாலானோர் எதிர்பார்த்தார்கள். இலங்கை அரசாங்கத்திடம் நீதியை நிலைநாட்டும் ஆர்வம் இல்லாத ஒரு பின்புலத்தில் பொறுப்புக்கூறலை எப்படி முன்னெடுக்கலாம் என்று நாங்கள் சிந்தித்தோம். இப்படிப்பட்ட ஒரு நிலையில் நாங்கள் எப்படிச் செயலாற்றலாம் என எண்ணிப்பார்த்தோம். இவ்விடயங்கள் தொடர்பாக பல மூலோபாயங்களை நாங்கள் வகுத்தோம். உண்மையை மீட்டெடுக்கும் செயற்பாடு அவற்றிலே முக்கியமானதொன்றாக இருந்தது. போரிலே குற்றங்களில் ஈடுபட்ட தனிநபர்கள் தொடர்பான உண்மைகளை வெளியிட முடிவு செய்தோம். இவ்வாறாகத்தான் போர்க்குற்றங்களைப் புரிந்த தனிநபர்கள் மற்றும் குழுக்கள் தொடர்பான ஆவணக்கோப்புகளை மக்கள் அறிந்துகொள்ளக்கூடிய விதத்தில் நாம் வெளியிடத் தொடங்கினோம். போர்க்காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தில் முக்கிய பொறுப்பை வகித்த ஜகத் ஜயசூரிய, லத்தீன் அமெரிக்க நாடுகளில் தூதுவராகப் பணியாற்றத் தொடங்கினார். இச்சந்தர்ப்பத்தில் சர்வதேச நீதிச் சட்டங்களின் அடிப்படையில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத்தொடங்கினோம். யாரோ சிலர், ஒருவேளை பிரேசில் நாட்டைச் சேர்ந்த இராணுவத்தினராகக்கூட இருக்கலாம் அவருக்கு முன்கூட்டியே தகவலைக் கொடுத்துவிட்டார்கள்.

10 ஆம் பக்கம் பார்க்க

# மகேந்திரனுக்கு பொதுமன்னிப்பளிக்குமாறு இறைவனிடம் வேண்டுவதைத் தவிர வேறுவழியே இல்லை என்கிறார் சகோதரி

**26 வருடங்களாக சிறையில் வாடிக்கொண்டிருக்கும் செல்லப்பிள்ளை மகேந்திரனின் கைதும், நீதிமன்ற தீர்ப்பும் மற்றும் அவரது வலிகள் நிறைந்த வாழ்க்கை தொடர்பில் மூத்த சகோதரியான செல்லப்பிள்ளை புஷ்பவதி இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய நேர்காணல்**



### கேள்வி:- மகேந்திரன் எப்படி கைது செய்யப்பட்டார்?

பதில்:- மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை தேவாலய வீதி தான் எமது சொந்த இடம். 1993.09.27 அன்று, வந்தாறுமூலை மக்கள் குடியிருப்பு பிரதேசத்தில் இராணுவத்தினரும் காவல் துறையினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பினைச் செய்தார்கள். அதன் பின்னர் யாரோ ஒருவரை வைத்து அடையாள அணி வகுப்பினைச் செய்தனர். இதன்போது தான் மகேந்திரனை சந்தேகத்தின் பேரில் கைது செய்து கொண்டு சென்றனர்.

எங்களின் குடும்பத்தில் அம்மா, அப்பா, சகோதரிகள் நாங்கள் நால்வர், சகோதரர்கள் இருவர் ஆகியோரே உள்ளனர். மகேந்திரனை இராணுவம் கொண்டு சென்றவுடன் அவரை விடுவிக்குமாறு கோரி இராணுவ முகாம் வரையில் சென்று கதறி அழுதோம். அவர்கள் விசாரணையின் பின்னர் காவல் துறையினரிடத்தில் ஒப்படைப்பதாகவும் நாளை அனுப்புகின்றோம் என்றும் கூறினார்கள்.

ஆனால் இன்று வரையில் வீடு திரும்பவில்லை. தற்போது வரையில் 26 வருடங்களாக அவர் சிறையிலேயே உள்ளார். அம்மாவும், அப்பாவும் இறக்கும்வரையில் மகேந்திரன் வந்திட்டாரா என்று கேட்டக்கொண்டே இருப்பார்கள். இறுதியில் அவர்களும் அவரைக் காணாமலேயே உயிர் நீத்தார்கள்.

அப்பா 2008இலும் அம்மா 2015இலும் உயிர்நீத்தார்கள். அம்மா இறந்தபோது மட்டும் மரணச்சடங்கில் கலந்து கொள்வதற்கு அவருக்கு அனுமதி கிடைத்திருந்தது. அப்போது மகேந்திரன் வந்திருந்தபோதும் எங்களுடைய முகத்தினை கூட நிமிர்ந்து பார்க்காது இருந்தார். அவருக்கான சொற்ப நேரம் நிறைவடைந்ததும் அவரை சிறை அதிகாரிகள் மீளவும் அழைத்துச் சென்று விட்டனர்.

### கேள்வி:- அவர் மீது எத்தகைய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன?

பதில்:- விசாரணை என்ற பெயரில் மகேந்திரனை அச்சுறுத்திய புலனாய்வு பிரிவினர், தமக்குத் தேவையான வகையில் குற்றச்சாட்டுக்களை அடுக்கி, அவரது கையொப்பத்தையும் பெற்றுக்கொண்டனர். அதற்கமைய நீதிமன்றத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டன. அவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நாங்களும் பல்வேறு முயற்சிகளை செய்து மீட்க முயன்றோம். எங்களுடைய சொத்துகளை இழந்தாவது அவரை மீட்க சட்டத்தரணிகளை தேடி அலைந்தோம்.

எனினும் எம்மால் எதுவும் செய்ய முடியாது போய்விட்டது. அக்காலத்தில் எமக்கு கொழும்பு செல்வது முதல் அனைத்துமே பிரச்சினையாக இருந்தது. என்ன செய்வது என்று தெரியாது தவித்தோம். எமது தவிப்பு ஒருபக்கம் இருக்கின்ற போது, 1994ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றினால் (வழக்கு எண் HC/6894/94) ஆயுட்காலச் சிறைத் தண்டனையும், அதற்கு மேலதிகமாக 50 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. சற்றும் எதிர்பாராத இந்தத் தண்டனைத் தீர்ப்பு அம்மா, அப்பா உட்பட அனைவரையுமே வெகுவாக பாதித்தது.

பிறகு அடுத்த கட்டமாக என்ன செய்யலாம் என்று முயற்சிகளை எடுத்த போது கடவுள் பெயரால் சட்ட உதவி அமைப்பொன்று மகேந்திரனுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பினை மேன் முறையீடு செய்வதற்கு உதவியிருந்தது. CA190/95 என்ற எண்ணை கொண்ட வழக்கினை தாக்கல் செய்தது. இதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றமானது, மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சரியானதே என்று உறுதி செய்து தீர்ப்பளித்தது.

அதனைத் தொடர்ந்து அதே சட்ட உதவி அமைப்பானது, உச்ச நீதிமன்றத்தில் (SC(spl) LA No.165/2003) என்ற இலக்கத்தினை கொண்ட மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவைப் பரிசீலித்த உச்ச நீதிமன்றம், ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட ஆயுட்காலச் சிறைத் தண்டனை சரியானதே என்றும், மேலதிகமாக வழங்கப்பட்டிருந்த 50 வருட சிறைத் தண்டனையினை, 10 வருட காலத்துக்குள் அனுபவித்து முடிக்குமாறும் இறுதித் தீர்ப்பளித்தது.

இப்போது மகேந்திரனுக்கு 46 வயதாகிறது. 26 வருடங்களாக சிறைச்சாலையிலேயே உள்ளார். அவருக்கு காசநோய், நீரிழிவு, மாரடைப்பு என பல நோய்களால் அன்றாடம் கஷ்டமான நிலைமைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றார். அவரை நாங்கள் பார்க்கச் செல்கின்றபோது நாம் கவலை அடைந்து விடக்கூடாது என்பதற்காக அவற்றை மறைத்தாலும் அவரின் நிலைமைகளை எம்மால் உணரமுடிகின்றது.

### கேள்வி:- விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து செயற்பட்டிருந்தாரா?

பதில்:- நாங்கள் வளர்ந்ததெல்லாம் போர் சூழ்ந்த மட்டக்களப்பு மண்ணில் தான். அறியாத, தெரியாத 16 வயதில் தான் மகேந்திரன் விடுதலைப்புலிகளின் அமைப்பின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு சுமார் இரண்டு வருடங்கள் அவர்களுடைய பாசறைக்குள் இருந்தார்.



ஆனால் சிறுவனான மகேந்திரனை எந்தவொரு படையணி நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தவில்லை. ஆயுதம் கூட மகேந்திரன் தரிக்கவில்லை. குறித்த அமைப்பின் அன்றைய கிழக்கு மாகாண தளபதியாக செயற்பட்டிருந்த கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனின் பணிப்பின் பேரில், முகாமுக்குள் சிறு எடுபிடி வேலைகளையே செய்து வந்தார்.

எனினும், தொடர்ந்து அங்கிருக்க விரும்பாத மகேந்திரன் அவ்வமைப்பில் இருந்து முற்று முழுதாக விலகி தனது 18 ஆவது வயதில், வீட்டிற்கு வந்து கூலித்தொழில் புரிந்து அம்மாவிற்கு உதவியாக இருக்க ஆரம்பித்தார். அதன் பின்னர் திருமணம் செய்து கொள்ளவும் தீர்மானித்தார். அவர் கைது செய்யப்பட்டபோது அவருக்கு 19 வயதாகியிருந்தது. திருமணம் செய்து சரியாக ஏழு நாட்களே நிறைவாகியிருந்தது. அத்துடன் அவரின் திருமண வாழ்வே முற்றுப்புள்ளியாகிவிட்டது.

### கேள்வி:- தமிழ் அரசியல் வாதிகளிடத்தில் மகேந்திரனின் விடுதலை குறித்து பேசினீர்களா?

பதில்:- ஆம், நாம் கிழக்கு, வடக்கு ஆளும்தரப்பு, எதிர்த்தரப்பு என அனைத்து அரசியல்வாதிகளிடத்திலும் மகேந்திரனின் விடயத்தினை கூறினோம். நேரடியாகவே சென்று பேச்சுக்களையும் நடத்தியிருந்தோம். ஆனால் இதுவரையில் எமக்கு எவ்விதமான தீர்வும் கிடைத்ததாய் இல்லை. அரசியல்வாதிகள் சிறைச்சாலைக்கு செல்கின்ற தருணங்களில் எல்லாம் மகேந்திரனை பார்த்து விட்டு எமக்கு அவரைப்பற்றி கூறுவார்கள். எனினும் மகேந்திரன் உட்பட சிறையில் வாடுகின்ற கைதிகளின் விடுதலை சம்பந்தமாக தமிழ் அரசியல்வாதிகள் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும் என்றே கருதுகின்றோம்.

### கேள்வி:- அவருடைய விடுதலை தொடர்பில் அடுத்த கட்டம் என்ன நடவடிக்கைகளை எடுக்கவுள்ளீர்கள்?

பதில்:- உயர் நீதிமன்றத்தினால் இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டதை அடுத்து எமக்கு

10 ஆம் பக்கம் பார்க்க

# இனப்படுகொலையாளர்களை மீட்பர்களாக சித்தரிக்க முற்படுகின்றது சிறீலங்கா அரசு

ஆர்த்திகன்

மிகப்பெரும் இனப்படுகொலை ஒன்றில் ஈடுபட்ட தனது இராணுவத்தை தமிழ் மக்களைக் காப்பாற்றும் ஒரு மனிதநேயமிக்க மீட்பாளராக காண்பிப்பதில் சிறீலங்கா அரசு மிகவும் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.




வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ள பெருமளவான இராணுவத்தை தக்கவைக்கவும், தமிழ் மக்களின் மனங்களை வெல்வதன் மூலம் அவர்களுக்கு நன்மை செய்வது என்ற போர்வையில் ஒரு மறைமுக இராணுவ ஆக்கிரமிப்பில் அவர்களை வைத்திருக்கவும் வேண்டிய வழிகளை நோக்கி சிறீலங்கா இராணுவமும் அரசும் செயற்பட்டு வருகின்றது.

வெள்ளம் வந்தால் படையினர் தான் ஓடுகின்றனர், உணவு விநியோகம், உதவிப்பொருட்கள் விநியோகம், கட்டிடம் கட்டுதல், கோவில் திருவிழாக்கள் என எல்லாவற்றிலும் வடக்கில் சிறீலங்கா இராணுவமே முன்னின்று செயற்பட்டுவருகின்றது. ஆனால் தெற்கில் அவ்வாறான ஒரு நிலை இல்லை. அது மட்டுமல்லாது, செய்யப்படும் உதவிகளை புகைப்படங்கள் மற்றும் காணொளிகளாக எடுத்து அதனை பிரச்சாரத்திற்கு பயன்படுத்தி வருகின்றது சிறீலங்கா அரசு.

கடந்த ஏப்பிரல் தெற்கில் குண்டு வெடித்தபோதும், வடக்கில் தான் அதிக காவலரன்கள் முளைத்துள்ளன. வடபகுதியில் உள்ள பாடசாலைச் சிறுவர்கள் மீது தான் சிறீலங்கா இராணுவம் அதிக அக்கறை காண்பிக்கின்றது. சிறீலங்கா அரசின் இந்தப் பிரச்சாரத்தின் உச்சக்கட்டமாக கடந்த வாரம் “அயலவர்” என்ற பெயரில் புதிய பத்திரிகை ஒன்றையும் சிறீலங்கா இரணுவம் வெளியிட்டு வருகின்றது.

அதில் தமிழ் மக்களுக்கு பலவந்தமாக செய்யப்படும் உதவிகள், மற்றும் அவர்களின் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை மீண்டும் வழங்குவதை ஏதோ படையினர் தம்வசம் உள்ள காணிகளை வழங்குவது போன்று பிரச்சாரப்படுத்திய புகைப்படங்களுடன் தமிழ் மக்களைக் கவரும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது இந்த பத்திரிகை.

அதாவது தமிழ் இனத்தின் மீது தான் மேற்கொண்ட இனப்படுகொலையின் வடுக்களை அடுத்த தலைமுறையின் மனங்களில் இருந்து அழிக்க முற்படுகின்றது சிறீலங்கா இராணுவம். வயதான மூதாட்டியை இரு கரங்களில் ஏந்தியவாறு வெள்ளத்தில் நடந்துவரும் சிறீலங்கா இராணுவச் சிப்பாயின் படத்தினை பத்திரிகையில் பார்க்கும் தமிழ் குழந்தைக்கு எமது வரலாறு மறுவளமாகத் தான் மனதில் பதியும்.

அதாவது சிறீலங்கா அரசு மிகவும் அனுபவமும் அறிவும் மிக்க வெளிநாட்டு அமைப்புக்களின் வழிகாட்டலில், மிகவும் சக்திவாய்ந்த ஒரு உளவியல் போரை ஆரம்பித்துள்ளது. அதில் வெற்றியும் கண்டு வருகின்றது. ஏனெனில் சிறீலங்கா படையினர் அரிசி கொடுத்தாலும், துவிச்சக்கர வண்டி கொடுத்தாலும் ஓடிச்சென்று வாங்கும் தமிழ் மக்கள் தமது இனத்தின் அடையாளங்களை தொலைத்து நிற்கின்றனர். கொடூரமான இனப்படுகொலை ஒன்றைச் செய்த இராணுவம், அதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மனநிலை, அவர்களின் துன்பங்கள் என்பவற்றை மறந்து சிங்கள இராணுவத்தின் திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுப்பதில் ஒரு பகுதி மக்களும், சில அரசியல்வாதிகளும் முன்நிற்பது தான் எமது இனம் பெற்றுள்ள சாபக்கேடு.

இனப்படுகொலையில் ஈடுபட்ட சிறீலங்கா இராணுவத்திற்கு எதிராக ஆதாரங்களைத் திரட்டி அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்து அவர்களின் வெளிநாட்டுப் பயணங்களை தடைசெய்து வருகின்றன அனைத்துலக அமைப்புக்கள். அதில் முக்கியமானது உண்மைக்கும் நீதிக்குமான அனைத்துலக அமைப்பு.

அதன் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்காவுடன் அண்மையில் ஒரு சந்திப்பு ஒன்றை மேற்கெண்டிருந்தேன். ஆதாரங்களைத் திரட்டி சிறீலங்கா இராணுவத்தின் 59 ஆவது படையணியின் முன்னாள் கட்டளை அதிகாரி சவீந்திர டீ சில்வாவுக்கு எதிராக எவ்வாறு வழக்குகள் பதிவு செய்துள்ளோம் என்பதில் ஆரம்பித்து, சிறீலங்கா படையினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல் போனவர்கள் தொடர்பில் ஆதாரங்களைச் சேகரித்து வருவது தொடர்பில் தமது அமைப்பின் நடவடிக்கைகளை அவர் தெளிவாகக் கூறியிருந்தார்.

கடந்த ஏப்பிரல் மாதம் இடம்பெற்ற தாக்குதலில் பின்னர் சிறீலங்கா அரசு எவ்வாறு மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என முன்னர் இனங்காணப்பட்ட படை அதிகாரிகளை மீண்டும் களத்தில் இறக்கியுள்ளது. அதனால் ஏற்படப்போகும் விளைவுகள் குறித்தும் இந்த அமைப்பு தெளிவான அறிக்கை ஒன்றை மக்களுக்கும், அனைத்துலக சமூகத்திற்கும் வெளியிட்டிருந்தது. இந்த அமைப்புக்களுக்கு உள்ள அக்கறைகள் ஏன் எமது மக்களில் ஒரு பிரிவினருக்கும், தமிழ் அரசியல்வாதிகளில் ஒரு பிரிவினருக்கும் இல்லாமல் போனது?

சிறீலங்கா அரசைப் பொறுத்தவரையில் தமது இராணுவத்தின் போர்க்குற்றங்கள் மற்றும் இனஅழிப்புக்களை மறைக்கும் முயற்சிகளை அது தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. அதற்கு சிறந்த உதாரணம் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற கூட்டமாகும்.

சிறீலங்காவின் மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் தீபிகா உடுகம மற்றும் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் சாந்தா கொட்டகொட ஆகியவர்களை அழைத்த சிறீலங்கா அரச தலைவர் மைத்திரிபால சிறீசேனா, ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படைக்கான பணியில் சிறீலங்கா படையினர் அதிக அளவில் ஈடுபடவேண்டும் எனவும், அதற்கு தடையாக உள்ள காரணிகளைக் கண்டறிந்து அவற்றிற்கான தீர்வைக் காணுமாறும் பணித்திருந்தார்.

அமைதிப் பணியில் சிறீலங்கா இராணுவம் ஈடுபடுவது தாமதமானால் ஐ.நா அமைப்பில் சிறீலங்கா இராணுவத்தின் பெயருக்கு களங்கம் ஏற்படும் எனவும், அதிகளவில் சிறீலங்கா இராணுவத்தினரை ஐ.நா அமைதிப்படையில் இணைப்பதற்கான வழிகளைத் தேடுமாறும் பணித்திருந்தார். அதாவது ஒருபுறம் ஐ.நாவின் அமைதிப்படையில் சிறீலங்கா இராணுவம், மறுபுறம் வடக்கில் தமிழ் மக்களுக்கு உதவுவதில் சிறீலங்கா இராணுவம், அதற்கு அப்பால் தமிழ் மக்களுக்கான பத்திரிகையை வெளியிடுகின்றது சிறீலங்கா இராணுவம்.

அதாவது சிறீலங்கா அரசும் அதன் படைகளும் மிகவும் சிறந்த திட்டமிடலுடன் தெளிவான பதையில் பயணிக்கின்றனர்,



ஆனால் 30 வருடத்திற்கு மேலாக குருதி சிந்திப் போராடிய இனம் இன்று அரசியல் தெளிவின்றி தமக்குள் முரண்பட்டு, தெருச் சண்டைக்காரர்களாக மாறி, தமது மக்களை எதிரியிடம் கையேந்த வைத்து நிற்கின்றது.

இந்த நிலைக்கு மக்களைக் கொண்டு சென்றதற்கான பொறுப்பை தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகள் அனைத்தும் ஏற்க வேண்டும் என்பதுடன் இதில் இருந்து மக்களை மீட்பதற்கான வழிகளைத் தேடவேண்டும். இல்லை எனில் விரிவாக்கம் பெற்றுவரும் பௌத்த ஆலயங்கள் மூலம் நிலங்களை இழந்தது போல எமது மக்களையும் இனப்படுகொலையாளிகளிடம் இழந்து வரலாற்றை தொலைத்த இனமாக வெளிநாடுகளில் அலையவேண்டிய நிலை ஒன்று ஏற்படும்.

# இலங்கையின் 8வது சனாதிபதி தேர்தலில் தமிழர் பாதுகாப்பை கருத்தில்கொண்டு தமிழ்த் தலைமைகள் முடிவெடுக்கவேண்டும்.

### அரசியல் ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்

இலங்கையின் 8வது சனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர்களைக் கோரும் அறிவிப்பு இலங்கையின் அரசியலமைப்புப்படி நவம்பர் மாதம் 7ம் திகதிக்கும் மார்கழி மாதம் 7ம் திகதிக்கும் இடையில் வெளியிடப்படல் வேண்டும்.

இந்தத் தேர்தல் முடிவும் 2020 இல் நடைபெறக் கூடிய சிறிலங்காப் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளும் இலங்கையில் பழைய மாதிரி மீளவும் "எதேச்சதிகாரவிலக்கல்" (Autocratic and Exclusionary) கொள்கைகள் சிறீலங்காவால் முன்னெடுக்கப்படுவதற்கான வழிகளைத் தோற்றுவித்துவிடுமா? என்கிற அச்சத்தை மேற்குலகில் ஏற்படுத்தியுள்ளது.

இதனை"வெளிநாட்டுக் கொள்கைள்" (Foreign policy) ) ஆய்விதழில் ஜெவ்ரிவெல்ட்மென் (Jeffrey Feltman) என்னும் ஆய்வாளர் சித்திரை 2019 இல் 'சிறீலங்காவின் சனாதிபதி தேர்தல் முன்னேற்றமா? பின்னடைவா? அல்லது செயலற்ற நிலையா? (Sri Lanka's Presidential Elections : Progress, Regression or Paralysis?)' என்னும் தலைப்பிலான கொள்கைமீளாய்வுக் கட்டுரை தெளிவாக எடுத்து விளக்குகிறது. சிங்களப் பெரும்பான்மையினருக்கும் மற்றைய சிறுபான்மையினருக்குமான உறவுகளை மட்டுமல்ல உலகில் இலங்கையின் பூகோள அரசியலிலும் இம் முடிவுகள் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது இவரின் கருத்தாக உள்ளது. இந்த கொள்கை மீளாய்வுக் கட்டுரை எதிர்வரும் இலங்கையின் சனாதிபதி தேர்தல் உலக அரங்கிலும் தமிழர்களுக்கு மத்தியிலும் மிகமுக்கியமான ஒன்றாகவுள்ளது என்பதைத்




தெளிவுபடுத்துகின்றது. இதே கருத்து உலகின் பல ராஜதந்திரிகளுக்கு மத்தியிலும் அனைத்துலக ஆய்வாளர்களுக்கு மத்தியிலும் உள்ளது. இந்நிலையில் இந்தத் தேர்தலில் தமிழர்களின் ஈழத்தமிழர் உரிமைகள் பாதுகாப்பு என்பது அனைத்துலக நிலையில் முதன்மை பெற்றுக் காணப்படுகிறது. இந்த உலகளாவிய அக்கறைக்கு ஏற்றவகையில் ஈழத்தமிழர்களும் புலம்பெயர் தமிழர்களும் அனைத்துலகிலும் உள்ள தமிழினத்தவர்களும் இந்தத் தேர்தலில் ஈழத்தமிழர் உரிமைகள் பாதுகாப்பை எவ்வாறு முதன்மை நிலைக்கு முன்னெடுக்கப் போகிறார்கள் என்ற சிந்தனையும் செயல் திட்டங்களும் பொதுக்கருத்துக் கோளத்தின் வழி உருவாக்கப்பட்டாலே இவ்விடயத்தில் அக்கறையும் ஆர்வமும் உள்ள அனைத்துலக செயற்பாட்டாளர்களால் ஏற்புடைய நடவடிக்கைகளைத் தொடரமுடியும்.

- ★ தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை தேர்தலுக்கான கொள்கை விளக்கங்களில் இணைக்க வைப்பது.
- ★ ஈழத்தமிழர் உரிமை பாதுகாப்புக்கே முக்கியத்துவம் கொடுத்து அதனையே தேர்தலில் போட்டியிடுவதற்கான கொள்கையாக வெளிப்படுத்திப் பொது வேட்பாளர் ஒருவரைத் தமிழர்கள் நிறுத்தல்
- ★ இன அழிப்பு இனத்துடைப்பு மனிதாயத்திற்கு எதிரான குற்றங்கள் காணாமல் போனவர்கள் குறித்த பொறுப்புக் கூறல் மனித உரிமை மீறல்கள் குறித்த தரவுகள் செய்திகள் சான்றாதாரங்கள் சாட்சிகளை கொண்ட ஆவணங்கள், படைகளால் பறிக்கப்பட்ட வீடுகள் காணிகள் வழங்கப்படாமலும் மக்களின் வாழ்வாதாரங்கள் மறுக்கப்பட்டும் மக்கள் தவிப்பது என்பவற்றை தேர்தல் காலத்தில் அதிக அளவில் வெளிப்படுத்தி நீதியும் புனர்வாழ்வும் புனர்நிர்மாணமும் இன்றிப் பத்தாண்டுகளாகத் தவிக்கும் மக்களுக்கான மேடையாக தேர்தல் களத்தை மாற்றுவது.
- ★ ஈழத்தமிழர் உரிமைகள் என்பது மனிதஉரிமைகள் மீறலுடன் மட்டுமல்லாது ஈழத் தமிழர்களின் தாயகம் தேசியம் தன்னாட்சி என்கிற அவர்களின் பிறப்புரிமையையும் மறுக்கின்ற பறிக்கின்ற செயலாக உள்ளது என்பதைத் தேர்தல் காலத்தில் தெளிவாக்குவது.

## சனாதிபதி வேட்பாளரை பொறுத்தே எமது முடிவு அமையும்! கூறுகிறார் விக்னேஸ்வரன்



சனாதிபதி தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களை பார்த்த பின்பே எமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்த முடியும் என்று முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார் யாழ்ப்பாணத்திற்கு இன்று ஞாயிற்றுக் கிழமை வருகைதந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் க.வி.விக்னேஸவரனை கோவில் வீதியில் உள்ள அவருடைய இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பினை முடித்த பின் ஊடகவியலாளர்களை சந்தித்த க.வி.விக்னேஸ்வரனிடம் அங்கிருந்த ஊடகவியலாளர்களால் சனாதிபதி தேர்தல் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் நடைபெறவுள்ள சனாதிபதி தேர்தலில் யார் போட்டியிடப் போகின்றார்கள் என்று இதுவரையில் யாருக்கும் உறுதியான முடிவுகள் தெரியாது. இதற்கு முன்னர் சனாதிபதி தேர்தலை பற்றி பேச முடியாது.

சனாதிபதி வேட்பாளர்களாக யார் அறிமுகப்படுத்தப்படுகின்றார்கள் என்பதை முதலில் பார்ப்போம். அதற்கு பின்னர் அந்த வேட்பாளர் கட்டையானவரா? நெட்டையானவரா? வெள்ளையா? கறுப்பா? என்பதை பார்த்து சிந்தித்து முடிவுகளை எடுப்போம் என்றார்.

## சீனாவிடம் 1 பில்லியன் டொலர் கடன் பெறுகிறது சிறீலங்கா



மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின், ஒரு பகுதியை நிறைவேற்றுவதற்கு, சிறீலங்கா அரசாங்கத்துக்கு 1 பில்லியன் டொலர் கடனை வழங்க சீனா முன்வந்துள்ளது. மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் கடவத்த தொடக்கம் மீரிகம வரையான, பகுதியை அமைக்கவே, சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியே (எக்சிம் வங்கி) இந்தக் கடனுதவியை வழங்கவுள்ளது.

இந்த திட்டத்துக்கு 1.1 பில்லியன் டொலர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதில், 85 வீதத்தை, சீனாவிடம் கடனாகப் பெறவும், 15 வீதத்தை, உள்நாட்டு வங்கிகளிடம் அரசாங்கம் திரட்டவும் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் முதலாவது கட்டமாக, 37.09 கி.மீ தூரமுள்ள பகுதியை அடுத்த ஆண்டு யூன் மாதத்துக்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**தீபச்செல்வன்**

தமிழ் அரசியல் கைதிகள் குறித்து, சர்வதேச ஊடகம் வெளியிட்ட விபரணம் ஒன்றில் செல்லப்பிள்ளை மகேந்திரன் குறித்து, தெரிவிக்கப்பட்ட விடயங்கள் நெஞ்சை உலுக்குகின்றன. மகேந்திரனுக்கு திருமணம் ஆகி ஒரு வாரம்கூட ஆகியிருக்கவில்லை. மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்




கழகத்தை அண்மித்த பகுதியில் நடந்த சுற்றி வளைப்பொன்றில், அவர் கைது செய்யப்பட்டார். 1993 ஆம் ஆண்டில் இந்த சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இன்றைக்கு 26 வருடங்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து சில காலம் இயங்கிய மகேந்திரன், இயக்கத்தை விட்டு, விலகி தனிப்பட்ட வாழ்வில் இருந்தபோதே கைதாகியுள்ளார்.

இவருக்கு எதிராக அப்போது வழக்குகள் தொடுக்கப்பட்டன. அத்துடன் 70 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இராணுவத்தினருடன் இணைந்து துரோகமிழைத்த ஆள்காட்டி ஒருவரே மகேந்திரனை காட்டிக் கொடுத்திருப்பதாக அழுதுலர்ந்து சிவந்த கண்களுடன் அவரது மருமகள் மெரீனா அந்த ஊடகத்தில் குறிப்பிடுகிறார். இப்போது ஆட்காட்டிகள் எல்லோரும் கைதிகளின் விடுதலை பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். போராளிகளைக் காட்டிக் கொடுத்த டக்ளஸ் தேவானந்தாக்களும் பாராளுமன்றத்தில் முன்னாள் போராளிகளின் தற்போதைய வாழ்க்கை குறித்து அழுது கண்ணீர் வடிக்கிறார்கள்.

உண்மையில் இதுவொரு விசித்திர காலம். ஆட்காட்டிகள் ஏன் தலையை ஆட்டினார்கள் என்று தெரியவில்லை. எத்தனையோ அப்பாவிகள் அன்றைக்கு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்கள். சுகயீனமான அம்மாவுக்கு மாத்திரைகள் வாங்கச் சென்ற மகனை, இராணுவத்தினர் குண்டு வைத்திருந்தான் என கைது செய்தனர். மட்டக்களப்பில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றவர், வீடு திரும்பவில்லை. இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் என்று அம்மாவுக்கு தகவல் கிடைத்தது. திருமணம் செய்த எல்லா ஏற்பாடுகளும் நடந்த நிலையில் திடீரென பிள்ளை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான். எத்தனையோ தாய்மாரின் இருதயங்கள் நொருங்கி உடைந்து போயின. எத்தனை மனைவிமாரின் நெஞ்சங்கள் வெடித்துப்போயின. எத்தனை குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்கள் உருகிவிட்டன. எமது தெருக்களில் எத்தனை நாட்கள், தாய்மார்கள் போராட்டம் நடாத்தியிருக்கிறார்கள். வீதிகளில் விழுந்து புரண்டழுது தமது பிள்ளைகளை விடுதலை செய்யக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அத்துலிய இரத்தின தேரர் கண்டியில் போராட்டம் நடத்திய போதே சிங்கள தேசம் மாத்திரமல்ல, சிங்கள அரசே ஆடியது. இரத்தின தேரரின் கோரிக்கை சிங்களத்தின் கோரிக்கையானது. ஆனால் எமது தாய்மார்களும் குழந்தைகளும் பெண்களும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கச் சொல்லி எத்தனை போராட்டங்களை செய்துவிட்டனர். ஆனந்த சுதாகரனின் மனைவி, அவரை தேடித் தேடியே நோய்வாய்ப்பட்டு இறந்துபோனார். கதைகளிலும் காவியங்களிலும் கேட்டதுபோலொரு மரணம். சிங்களமும் அசையவில்லை.




நாமும் அசையவில்லை. அவரது பிஞ்சுக் குழந்தைகள் சிறைச்சாலை வண்டியில் ஏறிய கொடூரக் காட்சியை பார்த்து உலகத் தமிழர்களே கண்ணீர் விட்டனர். சிங்கள தேசத்திற்கு இரக்கம் வரவே இல்லை. தமது தந்தையை விடுவிக்குமாறு தாயை இழந்த குழந்தைகள் கோரிக்கை விடுத்தனர். 2018 சித்திரை வருடப் பிறப்பில் தந்தை வீட்டுக்கு வருவார் என்று சொல்லி அனுப்பட்டார்கள் அந்தக் குழந்தைகள்.

இன்றைக்கு ஒரு வருடமும் கடந்து விட்டது. இன்னும் மைத்திரியின் நெஞ்சம் இரங்கவில்லை. இன்னும் ரணிலின் இருதயத்தில் ஈரம் வரவில்லை. இதுவே ஓர் சிங்களக் குழந்தை எனில், சிங்கள அரசு தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும் என்பதுபோல் துடித்திருக்கும். தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் ஈழத் தமிழ் மக்கள் என்ற பாராமுகம் ஒருபுறம். மற்றைய புறத்தில் அவர்களை புலி என்று கூறி அரசியல் செய்கிற கொடுமையும் நடக்கிறது. மைத்திரி புலிகளை விடுவிக்கப் பார்க்கிறார் என்று மகிந்த ராஜபக்ச பிரசாரம் செய்கிறார். மறுபறுத்தில் தமிழ் அரசியல் கைதிகளை பயங்கரவாதிகளை ஒருபோதும் விடுவிக்க முடியாது என்று மைத்திரிபால சிறிசேன சொல்லி அரசியல் நடத்துகிறார்.

மகிந்த என்ற கொடுங்கோலனின் அரசாட்சி மிகவும் கொடுமையானது என்றும் சர்வாதிகாரமானது என்றும் இந்த உலகமே அறியும். எனினும் தனது அரசியலுக்காகவும் சர்வதேச அரசியலை சமாளிக்கவும் 12ஆயிரம் விடுதலைப் புலிகளை விடுவித்த மகிந்தவைக் காட்டிலும் மைத்திரிபால சிறிசேன ரணில் அரசாங்கம் கொடுமையானது என்பதை புரிந்துகொள்ளுகின்ற இடம் இதுதான். தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் பொறுப்பற்ற விதத்திலும் பேரினவாத அரசியலுக்கு தீனி போடுகிற விதத்திலும் பேசி, அப்பாவிகளை தண்டிக்கும் இந்த அரசு எத்தகைய கொடுமையான அரசாக இருக்க வேண்டும்?

கருணா அம்மானும், கேபியும் வெளியில் உள்ள நிலையில், அப்பாவி தமிழ் அரசியல் கைதிகள் மாத்திரம் ஏன் சிறையிருக்க வேண்டும்? விடுதலைப் புலிகளுக்கு தண்ணீர் கொடுத்தவர்களும் அப்பாவிகளும் ஏன் அநியாயமாக தண்டிக்கப்பட வேண்டும். போரில் விடுதலைப் புலிகளுக்கு பொது மன்னிப்பு என்று அரசு அறிவித்த நிலையில், விடுதலைப் புலிகளுக்கு புனர்வாழ்வு என்று கூறி தடுப்பில் வைத்திருந்து விடுவித்ததுபோல அவர்களையும் விடுவித்திருக்க வேண்டுமல்லவா? அப்படியில்லாமல் இவர்களை மாத்திரம், ஏன் வஞ்சிக்க வேண்டும்? இதனால் எத்தனை மக்கள், எத்தனை குடும்பங்கள் கண்ணீர் வடிக்கின்றன?

பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், கொழும்பு மகசீன் சிறைச்சாலை சென்றுள்ளார். அங்கு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள 95 சிறைக்கைதிகள் உள்ளனர். அவர்களில் இரண்டு பேர் ஆயுள் கைதிகள். தமது விடுதலையை வலியுறுத்தி போராட்டங்களை முன்னெடுக்கின்ற சந்தர்ப்பத்தில், தம்மை போராட்டங்களை கைவிடுமாறு கூறிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் உள்ளிட்டவர்கள் பின்னர் அங்கு வருவதில்லை என்றும் தம்மை கவனிப்பதில்லை என்றும் தமது விடுதலை தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தமிழ் அரசியல் கைதிகள் தமது ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர். அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில், பாரிய உண்ணாவிரதப் போராட்டங்கள் சிறைகளில் முன்னெடுக்கப்பட்டது. அப்போது கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன், கால அவகாசத்தை வழங்கி கைதிகளின்

10 ஆம் பக்கம் பார்க்க

5 ஆம் பக்க தொடர்ச்சி →

## போரிலும் அதன் பின்னரும்

இதனால் அவர் திடீரென லத்தீன் அமெரிக்க நாட்டை விட்டுத் தப்பியோடவேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் திடீரெனத் தப்பிச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதை உற்றுநோக்கும் போது அங்கு நீதி நிலைநாட்டப்பட்டதையே நாம் உணருகின்றோம். உண்மையிலே ஜகத் ஜயசூரிய தானாக விரும்பி நாட்டுக்குச் செல்லவில்லை. தொடர்ந்து அங்கு தங்கியிருக்கக்கூடிய வாய்ப்பு அவருக்கு அங்கு இருந்தது. அவர் திடீரென நாடுதிரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது தொடர்பாக அவர் மிகவும் குழப்பமடைந்திருந்தார். அப்போது அவர் சொன்ன முதல் விடயம் தன்னால் இனிமேல் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்ய முடியாதென்பதும் அமெரிக்காவுக்கு இனி ஒருபோதும் தன்னால் பயணம் மேற்கொள்ள முடியாதென்பதையும் குறிப்பிட்டார். அவர் தப்பிச் சென்ற காரணத்தினால் அவர் மீது வழக்கைத் தொடர்வதில் நாம் வெற்றியடையவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவரது பெயர் பட்டியலில் இருக்கிறது. அவரால் இலங்கைக்கு வெளியே பயணங்களை மேற்கொள்ள முடியாது. அப்படி அவர் பயணஞ் செய்தால் அவர் கைதுசெய்யப்பட்டு பிரேசிலுக்கோ அல்லது ஏதாவதொரு இலத்தீன் அமெரிக்க நாடொன்றுக்கு நாடுகடத்தப்படும் ஆபத்து அவருக்கு இருக்கிறது. இரண்டாவதாக சவேந்திர சில்வா தொடர்பாக நாம் மேற்கொண்ட செயற்பாடுகளைக் குறிப்பிடலாம். இவரை இலங்கை அரசு ஒரு முக்கிய பதவிக்கு நியமித்திருந்தது. சவேந்திர சில்வா தொடர்பாக நாங்கள் ஒரு விரிவான ஆவணக் கோப்பைத் தயாரித்தோம். ஏனென்றால் சவேந்திர சில்வா யார் என்பதையும் போர்க்காலத்தில் அவர் எப்படிப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்பதையும் பொதுவாக எல்லோரும் மறந்திருந்த நிலையே காணப்பட்டது. அவர் பற்றிய ஆவணக் கோப்பை நாங்கள் பகிரங்கப்படுத்திய போது பல நாடுகளின் அரசுகளிடமிருந்தும் எங்களுக்குப் பல அழைப்புகள் வந்தன. சவேந்திர சில்வா பற்றிய ஆவணக் கோப்பின் ஒரு பிரதியை தமக்கும் அனுப்பி வைக்குமாறு அவர்கள் கேட்டிருந்தார்கள். அவர் தங்கள் நாட்டுக்குப் பயணம் செய்யும் தறுவாயில் தாம் அவருக்கு விசா வழங்குவதா? இல்லையா? என்ற முடிவை மேற்கொள்ளும் கடப்பாடு அந்த அரசுகளுக்கு இருக்கிறது. இந்த ஆவணக் கோப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக பல அரசுகள் அவருக்கு விசா வழங்க மறுக்கும் என்றே நான் கருதுகின்றேன். ஒரு போர்க்குற்றவாளியாக சவேந்திர சில்வா குற்றம் சாட்டப்படக்கூடிய நிலை இருப்பதை இந்த ஆவணக்கோப்பு சுட்டிக்காட்டுகின்றது. மே பதினெட்டாம் திகதி எமது இணையத்தளத்தில் இந்த அறிக்கையை பதிவேற்றம் செய்த பின்னர் வோஷிங்டனுக்கு நான் ஒரு பயணத்தை மேற்கொண்டிருந்தேன். அங்குள்ளவர்கள் அந்த அறிக்கையைப் பார்த்து தமது அதிர்ச்சியை வெளிப்படுத்தினார்கள். உண்மையில் போரின் போது நடைபெற்ற விடயங்களைப் பலர் இப்போது மறந்துவிட்டார்கள்.

இதன் பின்னர் நடைபெற்ற கலந்துரையாடல்களின் விளைவாக போரிலே இறந்தவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஆகியோரின் எண்ணிக்கையைக் கணக்கிடுவது ஒரு முக்கியமான விடயம் என்பதை நாம் இனங்கண்டு கொண்டோம். இதன் விளைவாக இணையத்தளத்தில் ஒரு செயற்பாட்டை நாம் முன்னெடுத்திருக்கிறோம். இவ்விடயத்தில் நிபுணத்துவம் பெற்ற பற்றிக் போல் என்பவரது உதவியை நாம் நாடியிருக்கிறோம். மே 17, 18, 19 ஆகிய திகதிகளில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் பற்றிய தரவுகளைக் கொண்டு அங்கே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடும் முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இந்த எண்ணிக்கையை நாம் கணக்கிடும் போது அங்கே உண்மையில் என்ன நடந்தது என்பது தொடர்பாக ஒரு உறுதியான முடிவுக்கு நாம் வரக்கூடியதாக இருக்கும். இன்றும் கூட யார் உண்மையில் உயிரோடு இருக்கிறார்கள்? யார் இறந்துவிட்டார்கள்? என்பதை எம்மால் கூறமுடியாதிருக்கிறது. எமக்குக் கிடைத்த புகைப்படங்கள் மற்றும் ஒளிநாடாக்களின் உதவியுடன் ஒரு சிலரது உடலங்களை நாம் அடையாளம் காணக்கூடியதாக இருக்கிறது என்பது உண்மைதான். இது பற்றிய முழுமையான உண்மை எங்களுக்குத் தெரியாது. இதன் விளைவாகத் தான் இணையத்தளத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் ஒரு பட்டியலை உருவாக்க நாம் முடிவுசெய்தோம். இத்தருணத்தில் உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடம் நாம் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறோம். காணாமல் ஆக்கப்பட்ட உங்கள் உறவுகளின் புகைப்படங்கள் உங்களிடம் இருக்குமாயின் அல்லது இராணுவத்திடம் யாரையாவது நீங்கள் கையளித்திருந்தால் அவர்கள் தொடர்பான விபரங்கள் அல்லது அக்காலப்பகுதியில் யாராவது இராணுவப் பகுதிக்கு செல்வதை நீங்கள் அவதானித்திருந்தால் அவர்கள் தொடர்பான விபரங்கள் போன்றவற்றை தயவு செய்து எங்களுக்கு அனுப்பிவையுங்கள். எமக்குக் கிடைக்கும் இத்தரவுகளைப் பயன்படுத்தி போரின் இறுதி நாட்களில் உண்மையில் எவ்வளவு பேர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற முடிவுக்கு நாங்கள் வரக்கூடியதாக இருக்கும். எமது இணையத்தளத்தில் காணாமல் ஆக்கப்பட்ட 350 தனிநபர்களின் விபரங்களை நாம் பதிவேற்றம் செய்திருக்கிறோம். இவர்களில் 29 பேர் சிறுவர்கள் என்பது முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும். இராணுவத்திடம் சரணடைந்து பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக எமக்குக் கிடைத்த தரவுகளை நோக்கும் போது கிட்டத்தட்ட 500 பேர், போரின் இறுதியில் இராணுவத்திடம் சரணடைந்திருக்கலாம் என்ற முடிவுக்கு வரலாம் என்று இவ்விடயத்தில் நிபுணத்துவத்தைக் கொண்டிருக்கும் பற்றிக் போல் எமக்கு அறியத்தருகிறார்.

9 ஆம் பக்க தொடர்ச்சி →

## நம்மாலும்

*போராட்டத்தை முடிவுபடுத்தி வைத்தார். எனினும் இலங்கை அரசிற்கு ஏற்பட்ட நெருக்கடி ஒன்று தீர்த்து வைக்கப்பட்டதே தவிர, தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலையும் கிடைக்கவில்லை. நீதியும் கிடைக்கவில்லை. வழமை போன்று கள்ள மௌனத்தால் தமிழ் அரசியல் கைதிகளையும் தமிழ் மக்களையும் மைத்திரி ஏமாற்றியுள்ளார். இங்கும் சாதுரியமற்ற செயற்பாடுகள் அவர்களை தொடர்ந்து சிறையிலடைத்தது. இன்று இலங்கை அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் தமிழ் தலைமைகள், அரசியல் கைதிகளின் விடுதலையையும் ஒரு முக்கிய நிபந்தனையாக முன்வைத்து அவர்களின் விடுதலையை சாத்தியப்படுத்தியிருக்க வேண்டும். மகிந்த ராஜபக்சவின் காலத்தைப் போலவே பாராளுமன்றத்தில் நின்று அரசியல் கைதிகளின் விபரத்தைக் கூறி, அரசை இறைஞ்சுகின்ற படலம் இன்னும் எதுவரையில் தொடரப் போகின்றது? அதற்கு ஏன் அரசிற்கு ஆதரவளிக்க வேண்டும்? ஒன்றில் அரசுக்கு ஆதரவு கொடுத்து, இவற்றை சாதிக்க வேண்டும். அல்லது அரசை எதிர்த்து சர்வதேச அரங்கில் தமிழ் அரசியல் கைதிகளை தடுத்து வைத்திருப்பதன் மனித உரிமை பின்னணி குறித்து எடுத்துரைக்க வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டம் பெரும் மனித உரிமை மீறலானது என்று மங்கள சமர வீர இதே அரசின் வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது ஐ.நாவில் கூறினார். அதே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன்று தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நீதியான சர்வதேச விசாரணையற்ற நிலையில், பயங்கரவாத சட்டங்களும் மனித உரிமை மீறல்களும் அரசில் கைதிகளின் விடுதலை மறுப்பும் தொடர்கின்ற சூழலில் இலங்கை அரசுக்கு கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுப்பது தமிழ் அரசியல் கைதிகளுக்கு சிறைவாசத்தை நாமே பரிசளிப்பதேயாகும். அரசால் சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நாமும் கைவிட்டிருக்கிறோம் என்பதை தான் இந்த விசித்திரகாலம் உணர்த்துகிறது*

6 ஆம் பக்க தொடர்ச்சி →

## மகேந்திரனுக்கு

என்ன செய்வது என்று தெரியாத நிலையில் மகேந்திரனே தனக்கு அளிக்கப்பட்டுள்ள கடூழிய சிறைத்தண்டனை பற்றி குறிப்பிட்டுள்ளார். அத்துடன் 12 ஆயிரம் விடுதலைபுலிகள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ள நிலையிலும், தான் பணியாற்றிய கட்டளைத்தளபதியே சுதந்திரமாக வெளியில் இருக்கின்ற நிலையிலும் தான் பதின்ம வயதில் செய்த செயற்பாடுகள் தவறாக இருப்பின் அவற்றை தயவாக மன்னித்து விடுமாறு கோரியிருந்தார். மேலும் தன்னிடத்தில் அச்சுறுத்திப்பெற்ற வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதையும் கவனத்தில் கொண்டு பொதுமன்னிப்பில் விடுதலை அளிக்குமாறு சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 2017 ஆம் அண்டு கருணை மனுவொன்றை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடாக அனுப்பியிருந்தார். ஆனால் அம்மனுவுக்கு கூட இதுவரையில் பதில் கிடைக்காத நிலையில் தான் இருக்கின்றோம்.

இந்நிலையில் நாம், அடுத்தகட்டமாக என்ன செய்வதென்று தெரியாது சிந்தித்துக்கொண்டிருக்கின்றோம்.

தன்னைக் கொலை செய்ய வந்த நபருக்கே மன்னிப்பளித்த சனாதிபதி 26வருடங்களாக இளமையை, உறவுகளை தொலைத்து நோய்வாய்ப்பட்டு எஞ்சிய ஆயட்காலத்தினை குடும்பத்தினருடன் கழிக்க விரும்பும் மகேந்திரனுக்கு மன்னிப்பளிக்க வேண்டும் என்று கோரி இறைவனை பிரார்த்திப்பதை தவிர எம்மால் என்ன செய்ய முடியும்.

# கல்முனை விவகாரம் மோசமடைய காரணம் யார்?

பூமிகன்

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த வலியுறுத்திக் கல்முனையில் மேற் கொள்ளப்பட்டு வந்த சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் சனிக்கிழமை நண்பகலுடன் நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால், சுழற்சி முறையிலான போராட்டம் தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு கிடைக்கும் வரை கல்முனை விவகாரம் தொடர்ந்தும் கொதி நிலையில்தான் இருக்கும்.

மூன்று மாதங்களுக்குள் கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஐ.தே.க. அமைச்சர்களும், கூட்டமைப்பு எம்.பிக்களும் இணைந்து வெள்ளிக்கிழமை வழங்கிய உறுதிக் கடிதத்தையும் போராட்டக்காரர்கள் கிழித்து வீசினர். "உடனடித் தீர்வு" என்பதுதான் அவர்களுடைய கோரிக்கை.

ஆனால், கனிக்கிழமை கல்முனை சென்ற பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர், ஒரு மாதத்துக்குள் பிரச்சினைளைத் தீர்ப்பதாகக் கொடுத்த வாக்குறுதியை ஏற்றுக்கொண்டு சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. சுழற்சி முறையிலான போராட்டமே தொடர்கின்றது. பிரச்சினைக்கு தீர்வு வரும் வரையில் இந்தப் போராட்டம் தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு பிரதேச சபை விவகாரம் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் இன்று ஒரு முறுகல் நிலைமையை ஏற்படுத்தி இருக்கின்றது. ஏட்டிக்குப் போட்டியாக உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கூடாது எனக் கோரி முஸ்லிம்களும் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துகின்றார்கள். இவ்விடயத்தை உறுதியான முறையில் கையாளக் கூடிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கவில்லை. அதனால்தான் கூட்டமைப்புத் தலைமை மீது மக்கள் சீற்றமடைந்திருக்கின்றார்கள். சுமந்திரன் மீது தாக்குதல் நடத்த முற்பட்டதும் அதனால்தான்.



இந்தப் பிரச்சினை இப்போதுதான் உருவான ஒன்றல்ல. கடந்த சுமார் மூன்று தசாப்த காலமாக இருந்துவரும் ஒரு பிரச்சினை. முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சினையை கூட்டமைப்பின் தலைமையால் தீர்திருக்க முடியும். நசீர் அஹமட்டின் கிழக்கு மாகாண ஆட்சியின் போது அதனை செய்திருக்கக் கூடிய நிலைமையில் கூட்டமைப்பு இருந்தது. ரணில் அரசுடனும், முஸ்லிம் காங்கிரஸ் தலைமையுடனும் நல்லுறவை வைத்திருந்த கூட்டமைப்பு எந்தவித சிக்கலும் இல்லாமல் இதனைச் செய்திருக்க முடியும்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் 11 ஆசனங்களை பெற்ற கூட்டமைப்பு, 7 ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்த சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் ஆட்சிப் பொறுப்பையும் முதலமைச்சர் பொறுப்பையும் ஒப்படைத்தது. நல்லெண்ணத்தை வெளிப்படுத்த இதனை செய்தார்கள். பதிலாக தண்டாயுதபாணிக்கு கல்வி அமைச்சும் துரைரட்ணசிங்கத்துக்கு விவசாய அமைச்சும் கிடைத்தது. முதலமைச்சர் பதவியையும், ஆட்சியையும் கொடுத்த போதாவது கல்முனை விவகாரத்தை இலகுவான ஒரு நிபந்தனையாகப் போட்டிருக்க முடியும்.

கல்முனை வடக்கு கோரிக்கை புதிய ஒரு பிரதேச செயலகத்தை உருவாக்க வேண்டும் என்பதல்ல. இன்று இருக்கும் உப-பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்த வேண்டும் என்பதாகும். இது முஸ்லிம் சமூகத்துக்குப் பாதிப்பான ஒன்றல்ல. இனரீதியாக பிரதேச செயலகங்களை அமைக்க கூடாது என்றும், நிலத்தொடர்பற்ற செயலகங்களை அமைக்க கூடாது என்று கூறி தமிழர்களின் கோரிக்கையை முடக்க நினைப்பதும் நியாயமானதல்ல. இனரீதியாக, நிலத்தொடர்பற்ற பிரதேச செயலகங்கள், கல்வி வலயங்கள் பல ஏற்கனவே உள்ளன. அதனால், இந்தக் கோரிக்கையை நிராகரிப்பதற்கான காரணங்கள் வலுவற்றவை.

கடந்த (2018) பிப்ரவரியில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்கு சென்றிருந்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முன்வைத்த வாக்குறுதிகளில் பிரதானமான ஒன்று இதுதான். "கல்முனை வடக்கு தமிழ் பிரதேச சபையை தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்பதாகும். ஆனால் தமிழ் மக்கள் போராட்டத்தில் இறங்கும் வரை அந்த விவகாரத்தை கூட்டமைப்புத் தலைமை கையில் எடுக்கவில்லை.

அமைச்சரவை தரமுயர்த்துவதற்கான அனுமதியை ஏற்கனவே வழங்கியிருந்தது. அதனை செயற்படுத்துவதற்கு முன்னர் அவசரமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமை ரணிலைச் சந்தித்தது. அதன்போது "தரமுயர்த்துவதில்லை" என்ற வாக்குறுதி ரணிலால் ஹக்கீமுக்குக் கொடுக்கப்பட்டது.



இதனைத் தெரிந்திருந்த சம்பந்தன், ரணிலுக்கு சங்கடத்தைக் கொடுக்கக்கூடாது என்ற "பெருந்தன்மையுடன்" கல்முனைத் தமிழர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை குப்பைக் கூடைக்குள் போட்டார்.

கிழக்கு மாகாண சபையில் கூட்டமைப்பு பெற்ற வெற்றியை, தமது வெற்றியாகப் பாவித்து அரசியல் செய்த முஸ்லிம் தரப்பினரது விட்டுக்கொடுக்க முடியாத பிடிவாதமும், தமிழ்த் தரப்பின் - குறிப்பாக கூட்டமைப்பின் இயலாமையுமே இப்போது தேரர்கள் இந்தப் பிரச்சினையைக் கைகளில் எடுக்கக் காரணமாகியிருக்கின்றது. குறிப்பாக ஈஸ்ட்டர் தாக்குதலின் பின்னர் உருவாகியுள்ள முஸ்லிம் எதிர்ப்புணர்வுடன் இதனைக் கையாள தேரர்கள் முற்படுகின்றார்கள்.

போர்க் காலத்தில் முஸ்லிம் மக்களைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களிடையே ஒரு பிளவை ஏற்படுத்துவதில் இனவாதிகள் வெற்றிபெற்றிருந்தார்கள். இப்போது, தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் களம் இறங்குவதன் மூலம் அந்தப் பிளவை மேலும் தீவிரமாக வைத்திருக்க அவர்கள் முற்படுகின்றார்கள். இந்தத் தேரர்கள் தமிழ் மக்களுடைய நலன்களில் எந்தளவுக்கு அக்கறையானவர்கள் என்பதை வரலாறு சொல்லும்.

தமிழ் முஸ்லிம் தரப்புக்கள் புரிந்துணர்வுடன் மிகவும் இலகுவாகத் தீர்த்திருக்கக்கூடிய இந்தப் பிரச்சினையை இப்போது தேரர்களின் கைகளில் கொடுத்துவிட்டார்கள். தேரர்களுக்கு தனியான நிகழ்ச்சி நிரல் ஒன்றுள்ளது. அதற்கேற்றவாறே அவர்கள் திட்டமிட்டுச் செயற்படுவார்கள். முஸ்லிம் தரப்பினரது விட்டுக்கொடுக்க முடியாது என்ற பிடிவாத மனப்போக்கும், தமிழர்களின் இயலாமையும்தான் இந்த நிலைமைக்குக் காரணம். அதேவேளையில் உடனடியாகத் தீர்க்கப்படக் கூடிய இந்தப் பிரச்சினையை இழுத்தடிக்கும் ரணிலின் வலைக்குள்ளும் இரு தரப்பினரும் விழுந்துவிட்டார்களா?

# சிறப்பு முகாம்களா? சித்திரவதைக் கூடங்களா? - வைகோ கண்டனம்



சிங்கள அரசின் இனவெறித் தாக்குதல்களில் இருந்து தப்பி, உயிர் பிழைப்பதற்காகத் தமிழகத்திற்கு வந்து அடைக்கலம் புகுந்த ஈழத்தமிழர்களை, இந்திய அரசு பல வழிகளிலும் அடக்கி, ஒடுக்கி வருகின்றது. தமிழ்நாட்டில் சந்தேக வழக்குகளில் கைதாகின்ற இளைஞர்களை விசாரணைக்குப் பின்னர் விடுவிப்பது வழக்கம். ஆனால், ஈழத்தமிழ் இளைஞர்கள் என்றாலே, அவர்களைத் தீவிரவாதிகளாகச் சித்தரித்து, எந்தவித விசாரணையும் இன்றி, செங்கல்பட்டில் இருந்த சிறப்பு முகாமிற்குள் ஆண்டுக்கணக்கில் பூட்டி வைத்தனர். இப்போது அந்த முகாமை, திருச்சி மத்திய சிறைக்கு இடம் மாற்றி, அங்கே அடைத்து வைத்து இருக்கின்றார்கள்.


எந்தவிதமான குற்றச்சாட்டுப் பதிவும் இல்லாமல், வழக்கு விசாரணையும் இல்லாமல், எப்போது விடுதலை என்பதும் தெரியாமல், இளமைக் காலம் முழுமையும் சிறைக்கு உள்ளேயே அடைபட்டுக் கிடந்த இளைஞர்கள், தங்களை விடுவிக்கக் கோரி எத்தனையோ போராட்டங்களை நடத்தி இருக்கின்றனர். கடந்த சில நாட்களாக, பாஸ்கரன், ரமேஷ், செல்வம் ஆகிய மூன்று தமிழர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். அவர்களது நியாயமான கோரிக்கையைத் தமிழக அரசு ஏற்காமல், புறக்கணித்து வருகின்றது. இந்திய அரசு, ஈழத்தமிழர்களைக் குற்றப் பரம்பரையினரைப் போல நடத்தி வருகின்றது. இது மனித உரிமைகளுக்கு எதிரானது.

நான் பல அகதி முகாம்களைப் பார்வையிட்டு, அங்கே உள்ள அவலநிலையை நேரில் கண்டு அறிந்தேன். எந்தவிதமான அடிப்படை வசதிகளும் கிடையாது. கழிப்பு அறைகளின் பக்கமே போக முடியவில்லை. கிட்டத்தட்ட திறந்தவெளி சிறைச்சாலை போலத்தான் இருக்கின்றன. அவர்களது வேதனைக் கண்ணீரைப் பல மேடைகளில் எடுத்துக் கூறி இருக்கின்றேன்.

ஐரோப்பிய நாடுகள், அவுஸ்திரேலியா, கனடாவுக்குக் குடிபெயர்ந்த ஈழத்தமிழர்களை, அந்த நாடுகள் வரவேற்று மதித்து, உதவிகள் அளித்து, குடி உரிமையும் வழங்கி இருக்கின்றன. ஆனால், அகதிகளுக்கான ஐ.நா. ஒப்பந்தத்தில் இன்றுவரை இந்தியா கையெழுத்து இடவில்லை.

ஆனால், இந்தியாவில் குடி உரிமை கோருகின்ற ஈழத்தமிழர்களுடைய விண்ணப்பங்களை, 16 வாரங்களுக்குள் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும் என, நேற்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, மத்திய அரசுக்கு உத்தரவு பிறப்பித்து இருக்கின்றது. எனவே, இந்தியாவில் உள்ள ஈழத்தமிழர்களை, இந்திய அரசு இனியும் சந்தேகக் கண்ணோடு அணுகக் கூடாது. சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும். அத்தகைய முகாம்களை அடியோடு நீக்க வேண்டும் என வலியுறுத்துகின்றேன்.

# நள்ளிரவில் பயங்கரம்: பெண் பத்திரிகையாளர் மீது துப்பாக்கிச்சூடு



டெல்லியில், பெண் பத்திரிகையாளர் மீது நள்ளிரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

நொய்டாவைச் சேர்ந்தவர் மிதாலி சந்தோலா. செய்தி சேனல் ஒன்றில் பணியாற்றி வருகிறார். இவர், வேலையை முடித்துவிட்டு நள்ளிரவு 12.30 மணிக்கு காரில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். கிழக்கு டெல்லியில் உள்ள அசோக் நகர், தரம்ஷிலா நாராயணா சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை அருகே வந்தபோது, அவர் காரை ஒரு கார் முந்திச் சென்றது. அதில் முகமூடி அணிந்திருந்த இருந்த இரண்டு பேர் இருந்தனர். அவர்கள் இவர் கார் மீது முட்டைகளை வீசினர். அதிர்ச்சி அடைந்த மிதாலி, காரை நிறுத்தாமல் சென்றார். இதையடுத்து அவர்கள், மிதாலியின் காரை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இதில், அவர் நெற்றியிலும் கைகளிலும் குண்டு பாய்ந்தது. பின்னர் அவர்கள் தப்பிவிட்டனர். பின்னர் மிதாலி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர் அபாய கட்டத்தைத் தாண்டி விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர் குடும்ப பிரச்சனை காரணமாக, இந்த துப்பாக்கிச்சூடு நடந்திருப்பதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உலகிலேயே அதிக அறிவுத்திறன் கொண்ட தமிழகச் சிறுமி



உலகிலேயே அதிக அறிவுத்திறன் கொண்ட திருநெல்வேலியை சேர்ந்த சிறுமி விசாலினி! தனக்குரிய இணைய தளத்தைத் தானே வடிவமைத்தவர். அதுவும் 24 மணி நேரத்தில். தான் கற்றதோடு மட்டும் நிறுத்தவில்லை இவர். கற்பிக்கவும் தொடங்கினார். தன் 11வயதில், 25 க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளுக்கு அழைக்கப்பட்டு அங்கு இறுதியாண்டு மாணவர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், முதல்வர்களுக்கு கருத்தரங்குகளை நடத்தியவர். இவரது திறமையை அறிந்த Indian Overseas Bank நிர்வாகம் சர்வதேச தலைமையகத்துக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்த போது விசாலினிக்கு வயது 12. அங்கு உலக அளவிலான IOB GM தலைமையிலான IT நிபுணர்களுக்கு அரை மணி நேரம் வகுப்பு எடுக்கச் சொன்னார்கள். ஆனால் விசாலினியோ இரண்டு மணி நேரம் பாடம் நடத்தி அனைவரையும் பிரமிக்க வைத்தாள். தன் சொந்த முயற்சியால் மட்டுமே, உலகின் பல்வேறு நாட்டு அறிஞர்களின் பாராட்டைப் பெற்ற விசாலினி, ஓர் இந்தியர்.அதுவும் தமிழர். ஆம்! உண்மை தான். தமிழனின் மூளை தரணியையே வெல்கிறது

HCL நிறுவனம் The Pride of India Visalini என பாராட்டிய போது அவருக்கு வயது 11. TEDx சர்வதேச மாநாட்டில் தலைமை உரை ஆற்றிய விசாலினி 11 வயதில், The Youngest TEDx Speaker என்ற பட்டமும் பெற்றார். London, World Records University, Dean தாமஸ் பெய்னிடம் பாராட்டு பெற்றார் விசாலினி. Times Now English News நிறுவனமோ ஒருபடி மேலாக விசாலினியின் வீட்டிற்கே வந்து 2 நாட்கள் தங்கி அவரைப் பற்றிய தகவல்களைத் திரட்டி, The Amazing Indian Visalini என அரை மணி நேர Documentry படத்தை ஒளிபரப்பியது. நியூ சவுத் வேல்ஸை தலைமையிடமாகக் கொண்டு, காமன் வெல்த் ஆப் ஆஸ்திரேலியாவால் தொடங்கப்பட்ட ஆஸ்திரேலியாவின் முன்னணிச் செய்தி நிறுவனமான SBS அவுஸ்திரேலியா. உலகின் 74 மொழிகளில் 174 நாடுகளில் விசாலினியின் அரைமணி நேர பேட்டியை ஒலிபரப்பி கௌரவப் படுத்திய போது விசாலினிக்கு வயது 13 தான். ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் விசாலினியின் தந்தைக்கு வந்தது ஒரு தொலைபேசி அழைப்பு எமது நாட்டு கௌரவ பிரதமர் உங்களது மகளை சந்திக்க விரும்புகிறார் என்று. பிரதமரைக் கண்ட விசாலினி, எழுந்து நின்று தமிழில் வணக்கம் என்று சொல்ல, பதிலுக்கு தமிழிலேயே வணக்கம் என்றார் பிரதமர் மோடி. விசாலினியுடன் உரையாடிய போது, இந்தச் சிறுவயதில் நீ செய்துள்ள சாதனைகளே, இந்திய நாட்டிற்கான சேவைதான் என்று நெகிழ்ந்து பாராட்டினார்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் கருணாகரனோ, விசாலினி இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையில் முக்கியப் பங்காற்றுவார் என்று பெருமை பொங்க வாழ்த்தினார். உலக அளவில் பாராட்டு பெற்றுள்ள விசாலினிக்கு, தான் இன்னும் தமிழக முதல்வரின் பாராட்டைப் பெறவில்லையே என்பது மிகப்பெரிய ஆதங்கம். உங்களுக்குத் தெரியுமா, சாதாரண மனிதர்களின் அறிவுத்திறன் 90 முதல் 110 வரை இருக்கும். கணினி ஜாம்பவான் பில்கேட்ஸுக்கு IQ level 160. ஆனால் விசாலினியின் IQ level 225. உலகிலேயே மிக அதிக அறிவுத்திறன் கொண்டவர் என்ற உலக சாதனை படைத்தவர் விசாலினி,

# எங்கள் நாட்டின் மீது ஒரு தோட்டா பாய்ந்தால் அமெரிக்காவின் உடைமைகள் தீக்கிரையாகும் - ஈரான் எச்சரிக்கை

எங்கள் நாட்டின் மீது ஒரு தோட்டா பாய்ந்தால் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு சொந்தமான உடைமைகள் தீக்கிரையாகும் என ஈரான் ராணுவம் எச்சரித்துள்ளது.

ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறித்துக்கொண்ட அமெரிக்கா, அந்நாட்டுடன் கடும் மோதல் போக்கை கடைபிடித்து வருகிறது. இதனால் ஈரானுக்கு எதிராக கடுமையான பொருளாதார தடைகளையும் அமெரிக்கா விதித்துள்ளது.

ஈரானும் அமெரிக்காவின் மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம் என்று பதிலடி கொடுத்து வருகிறது. சமீபத்தில் ஓமன் வளைகுடாவில் எண்ணெய் கப்பல்கள் மீது அடுத்தடுத்து தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலுக்கு ஈரானும், அமெரிக்காவும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டினர்.






இதற்கிடையே ஈரானின் தெற்கு பகுதியில் உள்ள ஹோர்மஸ்கான் என்ற பிராந்தியத்திற்குள் வந்த அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஈரான் தெரிவித்தது.


இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த அமெரிக்கா, உளவு விமானம் சர்வதேச எல்லையில்தான் பறந்தது. அதை வேண்டுமென்றே ஈரான் அரசு சுட்டு வீழ்த்தியதாக குற்றம்சாட்டியது. இதனை தொடர்ந்து அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ஈரானை எச்சரிக்கும் விதமாக தனது டுவிட்டரில் "ஈரான் மிகப் பெரிய தவறு செய்து விட்டது" என பதிவிட்டிருந்தார்.

மேலும், ஈரான் மீது அமெரிக்க அதிபர் டிரம்ப் தாக்குதல் நடத்த உத்தரவிட்டு அதனை கடைசி நிமிடத்தில் கைவிட்டதாக வெளிவந்த செய்தி இரு நாடுகளிடையே போர் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், எங்கள் நாட்டின் மீது ஒரு தோட்டா பாய்ந்தால் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகளுக்கு சொந்தமான உடைமைகள் தீக்கிரையாகும் என ஈரான் நாட்டின் ராணுவ தளபதியின் செய்தி தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் அபோல்பஸல் ஷேகர்ச்சி எச்சரித்துள்ளார்.

## கம்போடியாவில் 7 மாடி கட்டிடம் இடிந்து விபத்து - 18 பேர் பலி

கம்போடியா நாட்டின் தென்மேற்கு பகுதியில் கட்டிடம் இடிந்து தரைமட்டமான விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 18 ஆக அதிகரித்துள்ளது. தென்கிழக்கு ஆசிய கண்டத்தில் அமைந்துள்ள கம்போடியா நாட்டின் தென்மேற்கு பகுதியில் உள்ள பிரபல சூதாட்ட நகரமான சிஹானோக்வில்லி பகுதியில் சீனாவை சேர்ந்த ஒரு நிறுவனம் 7 மாடிகளை கொண்ட புதிய கட்டடத்தை உருவாக்கி வருகிறது.



இந்த கட்டடத்தின் 80 சதவீதம் பணிகள் நிறைவடைந்த நிலையில் நேற்று வழக்கம்போல் ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். அப்போது திடீரென ஒட்டுமொத்த கட்டடமும் சில நொடிகளில் நொறுங்கி விழுந்து தரைமட்டமானது. இடிபாடுகளுக்குள் சிக்கிய சுமார் 50 தொழிலாளர்களை மீட்க தீயணைப்பு படையினர் விரைந்து வந்தனர்.

## சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்திற்கு 19 பேர் காயம்



சீனாவின் தென்மேற்கே சிச்சுவானில் காங்சியான் கவுண்டி பகுதியில் நேற்றிரவு மித அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 5.4 ஆக ரிக்டர் அளவுகோலில் பதிவானது. இந்நிலையில் சீன அதிகாரிகள் இன்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், நிலநடுக்கத்தில் காயமடைந்தோர் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது.

இன்னும் 11 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என தெரிவித்துள்ளது. கடந்த திங்கட்கிழமை சிச்சுவானின் சாங்னிங் கவுண்டி பகுதியில் 6.0 என்ற அளவிலும், காங் கவுண்டி பகுதியில் 5.1 என்ற அளவிலும் நிலநடுக்கம் பதிவானது. இதில் 13 பேர் வரை உயிரிழந்தனர்.

## அமெரிக்காவுக்கு புதிய இராணுவ அமைச்சராக மார்க் எஸ்பரை தேர்வு செய்தார், டிரம்ப்

அமெரிக்காவுக்கு புதிய இராணுவ அமைச்சராக மார்க் எஸ்பரை டிரம்ப் தேர்வு செய்தார். வல்லரசு நாடுகளுடன் 2015-ம் ஆண்டு, ஈரான் செய்து கொண்ட அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா கடந்த ஆண்டு திடீரென விலகியது. அதைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையேயான உறவு மிக மோசமாகி வருகிறது.

சமீபத்தில் கூட அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானம் ஒன்றை ஈரான் சுட்டு வீழ்த்தியது. அதைத் தொடர்ந்து ஈரானின் 3 இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க சனாதிபதி டிரம்ப் உத்தரவிட்டு, பின்னர் கடைசி நேரத்தில் திரும்பப்பெற்றார். இந்த நெருக்கடியாக கால கட்டத்தில் இப்போது அமெரிக்காவில் இராணுவ அமைச்சர் பதவி வெற்றிடமாக உள்ளது. இராணுவ அமைச்சராக இருந்து வந்த



ஜிம் மேட்டிஸ் கடந்த ஆண்டு டிசம்பர் 31-ந் தேதி பதவி விலகினார். அதைத் தொடர்ந்து ராணுவ அமைச்சர் பொறுப்பை வகித்து வந்த பேட்ரிக் ஷனகன் அந்தப் பதவியில் தொடர விரும்பவில்லை. இந்த நிலையில் புதிய இராணுவ அமைச்சராக மார்க் எஸ்பர் (வயது 55) என்பவரை சனாதிபதி டிரம்ப் தேர்வு செய்தார். இவரது நியமனத்துக்கு நாடாளுமன்ற செனட் சபை ஒப்புதல் அளிக்க வேண்டும். செனட் சபையில் குடியரசு கட்சிக்கு பெரும்பான்மை பலம் உள்ளதால் மார்க் எஸ்பர் நியமனத்துக்கு ஒப்புதல் கிடைப்பதில் சிக்கல் ஏதும் இருக்காது.

# பரிணாம வளர்ச்சியில் பறவைகள் தோன்றியது எப்படி?

முதலில் ஒரு செல் உயிரியான பக்ரீரியாவில் இருந்து அமீபா, பின்னர் அமீபாவில் இருந்து பல செல் உயிரிகள், பின்னர் தாவரங்கள், பின்னர் அவற்றைத் தொடர்ந்து விலங்குகள் என்று ஒரே நேர்கோடாக உயிர்கள் தோன்றியதாகவே தொடக்கத்தில் கருதப்பட்டது. இதன் அடிப்படையில் ஒரு பரிணாம மரம் உருவாக்கப்பட்டது.

ஆனால், தொடர்ச்சியாக கண்டுபிடிக்கப்படும் புதைபடிமங்கள் மற்றும் அவற்றின் மீதான நவீன பரிணாம ஆய்வுகளின் காரணமாக, அந்த பரிணாம மரம் கிளைக்கும் விதம் தொடர்ந்து மாற்றத்துக்கு உள்ளாகிக்கொண்டே இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அதனடிப்படையில் பரிணாம வளர்ச்சி என்பது



கற்பனைக்கு எட்டாத அளவுக்கு கிளைத்த ஒரு மரம் என்பது நவீன கால ஆய்வுகள் மூலம் தொடர்ந்து நிரூபிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், பறவைகள் மற்றும் ஆர்கியாப்டேரிக்ஸ் (Archaeopteryx) எனும் ஒரு டைனோசர்-பறவை இரண்டுக்கும் இடையிலான விலங்குகளில் மட்டுமே இருந்ததாக கருதப்பட்டு வந்த சிறகுகள், பறவைகள் தோன்றுவதற்கு சுமார் 10 கோடி ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டன என்றும், டைனோசர்கள் தோன்றுவதற்கு முன்பே கூட தோன்றியிருக்கலாம் என்றும் ஒரு சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி மைக் பென்ட்டன் தலைமையிலான ஆய்வுக்குழுவினர் மேற்கொண்ட புதைபடிம ஆய்வில் இந்த



தகவல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

டீரோசார்ஸ் (Pterosaurs) எனும் ஒரு வகை ஊர்வன விலங்குகளின் புதைபடிம ஆய்வில், அவற்றின் உடலில் சிறகுகள் இருந்தது கண்டறியப்பட்டது. டைனோசர்களின் நெருங்கிய உறவினர்களாக கருதப்படும் டீரோசர்களின் சிறகுகள் அச்சு அசலாக டைனோசர்களின் சிறகுகள் போலவே இருந்ததும், அதன் காரணமாக சிறகுகள் தோன்றிய காலம் தற்போது குறைந்தது சுமார் 25 கோடி ஆண்டுகள் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளதும் இங்கு கவனிக்கத்தக்கது.

தொடக்ககால ட்ரையாசிக் உலகமானது (Triassic world) மிக மிக மோசமான ஒரு பேரழிவில் இருந்து மீண்டு வந்துகொண்டிருந்த காலத்தில் சிறகுகள் தோன்றியிருக்க வேண்டும் என இந்த ஆய்வுத்தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன என்கிறார் விஞ்ஞானி பென்ட்டன். முக்கியமாக, இந்த ஆய்வு மூலமாக, உலகின் முதல் பறவையாக கருதப்படும் ஆர்கியாப்டேரிக்ஸ் (Archaeopteryx) தோன்றுவதற்கு முன்பே சிறகுகள் தோன்றியிருக்க வேண்டும் என்றும், டைனோசர்களின் மூதாதையர்களான ஆர்கொசார்களுக்கும் (archosaurs) பாலூட்டிகளின் மூதாதையர்களுக்கு மிகப்பெரும் போர் நடந்த காலத்தில்தான் சிறகுகள் தோன்றியிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

இவ்விரு விலங்கினங்களுக்கும் இடையிலான போட்டியில் ஆர்கொசார்களுக்கு உடல் வெப்பத்தை அதிகப்படுத்தி உதவவே சிறகுகள் தோன்றியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. அதன்பிறகு சிறகுகள் பறக்க பயன்படத் தொடங்கியிருக்கக் கூடும் என்கிறார் விஞ்ஞானி பென்ட்டன்.

முக்கியமாக, கடந்த 1994-ம் ஆண்டு சீனாவில் சிறகுகள் உடைய ஆயிரக்கணக்கான டைனோசர் புதைபடிமங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் புதைபடிம ஆய்வாளர்கள் சிறகுகள் தோன்றிய காலம் டைனோசர்களுக்கு முந்தைய காலமாக இருக்கலாம் என்று எண்ணத் தொடங்கிவிட்டனர்.

ஆனால், கடந்த 2014-ம் ஆண்டு ரஷியாவில் கண்டறியப்பட்ட குளிண்டாட்ரோமியஸ் (Kulindadromeus) டைனோசர் புதைபடிமத்தின் உடல் முழுக்க இருந்த சிறகுகள், டைனோசர்கள் தோன்றும் முன்னரே சிறகுகள் தோன்றியிருக்கலாம் என்ற கருத்தை அழுத்தமாக முன்வைத்தது. ஏனெனில், குளிண்டாட்ரோமியஸ் இன டைனோசர்கள், பரிணாமத்தில் பறவைகள் தோன்றுவதற்கு மிக மிக நீண்ட காலத்துக்கு முன்பு தோன்றியவை என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லாமல், கடந்த 2017-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு மரபியல் ஆய்வில், ஊர்வன விலங்குகளின் செதில்கள், பறவைகளின் சிறகுகள் மற்றும் பாலூட்டிகளின் ரோமங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியானது அனைத்தும் ஒரு மரபியல் கட்டுப்பாட்டு அமைப்பினால் தூண்டப்பட்டது என்று



கண்டறியப்பட்டது.

அதாவது, செதில்கள், சிறகுகள் மற்றும் பாலூட்டி ரோமங்கள் ஆகிய அனைத்து பாகங்களின் வேரானது சுமார் 42 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு மூதாதையர் உயிரினத்தில் இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. மேலும், சிறகுகள் டைனோசர்களின் அடிப்படை பண்புகளில் ஒன்றாகவே இருந்திருக்கும் என்றும், பின்னர் டைனோசர்கள் அளவில் பெரிதாக சிறகுகளின் வளர்ச்சி தடைப்பட்டு இருக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இது எல்லாம் ஒருபுறமிருக்க, பறவைகள்



வெற்றிகரமாக வாழ சிறகுகள் அவற்றுக்கு மிக மிக முக்கியமான ஒரு பாகமாக இருந்தது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்கிறார் ஆய்வாளர் பென்ட்டன். மேலும், இந்த ஆய்வு மூலமாக, பறவைகள் ஊர்வன விலங்குகளில் இருந்து உடனே தோன்றவில்லை என்றும், மாறாக சுமார் 10 கோடி ஆண்டு காலத்தில், முப்பதுக்கும் மேற்பட்ட குணாதிசயங்களை உருவாக்கிக்கொண்ட பின்னரே பறவைகள் தோன்றின என்றும் கூறுகிறார் விஞ்ஞானி பென்ட்டன்.